பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 11 சனிக்கிழமை (24.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 179

## அம்புலன்ஸ் வண்டியையும் விட்டுவைக்கவில்லை

# முறிகண்டி, மல்லாவி கிளைமோர் தாக்குதல்களில் 18 அப்பாவிகள் பலி!

## மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் 6 பேர்!!

கிளிநொச்சி, மே24

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு இடங்களில் - முறிகண்டியிலும் மல்லாவியிலும் - 24 மணி நேரத்திற்குள் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் மொத்தம் 18 பேர் பலி கொள்ளப்பட்டனர்.

அவர்களில் 6 பேர் மாணவர்களும் சிறுவர்களும் ஆவர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கொலையுண்ட பரிதாபமும் இடம் பெற்றிருக்கிறது.

நோயாளர்களைக் காவிச்செல்லும் அம்புலன்ஸ் வண்டியைக் கூட தாக்குதல் நடத்தியோர் விட்டுவைக்கவில்லை.

இலங்கை அரச படைகளின் ஆழ ஊடுருவும் அணிகளே இந்தக் கோரத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாக விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)



## அம்பாறையில் சிப்பாய் பலி

அம்பாறை, மே 24

அம்பாறை, பக்மிட்டியாவப் பகுதியில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டுத் தாக்குதலில் சுண்டிக்குளத்தில் 2 பேர் பலி

கிளிநொச்சி, மே 24

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கற்பாட்டுப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது விமானப்படையினரின் கிபிர் விமானங்கள் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் இரு அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்றும் மேலும் மூவர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இத்தாக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு மட்டுமல்ல புலிகளுக்கும் சீனாவிடமிருந்துதான் ஆயுதங்களாம்!

### 'ஜேன்ஸ்' புலனாய்வு மஞ்சரி திடுக்கிடும் தகவல்

புதுடில்லி, மே 24

இலங்கையில் தொடரும் மோதல்களில் சீனாவின் ஆயுதங்கள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன எனத் தெரிவித்துள்ள உலகின் முன்னணிப் புலனாய்வுச் சஞ்சிகையான 'ஜேன்ஸ் இன்ரெலிஜன்ஸ் ரிவியூ' இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் சீனாவிடமிருந்துதான் ஆயுதங்களைப் பெறுகின்றன எனத் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் உட்படப் பல பயங்கரவாத அமைப்புகளுக்குப் பழைய (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சங்கத்தலைவர் கொலை

வவுனியா, மே 24

வவுனியா, மணிபுரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரான பழனியாண்டி பெரியண்ணன் (வயது - 60) என்பவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## மன்னாரில் குண்டுவீச்சு

மன்னார், மே 24

மன்னார், பரப்பக்கடந்தானில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுக்காலை 7.40 மணியளவில் விமானப்படையினரின் ஜெற் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

அப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டளைத்தளத்தை இலக்குவைத்தே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# 'த நேஷன்' வார இதழின் பிரதி ஆசிரியர் கடத்தப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டார்

### பாதுகாப்புத் தரப்பைக் கடுமையாக விமர்சித்ததால் நேர்ந்த விபரீதம்

கொழும்பு, மே 24

'த நேஷன்' ஆங்கில வார இதழின் பிரதி ஆசிரியர் கீத் நொயர் (வயது - 44) இனந்தெரியாத நபர்களினால் வியாழக்கிழமை இரவு கடத்தப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்ட பின்னர் நேற்று அதிகாலை விடுவிக்கப்பட்டுள்ளார்.

நொயர் தனது அலுவலகத்திலிருந்து இரவு 10.45இற்கு தெஹிவளையில் உள்ள தமது வீட்டுக்குத் திரும்பினார் எனவும் தமது காரை வீட்டு வாகனத்தரிப்பிடத்திற் குள் நிறுத்துவதற்கு முயன்று கொண்டிருந்த வேளை அவர் கடத்தப்பட்டார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. கீத் நொயரிற்காக வீட்டுக் கதவினைத் திறந்தவேளை கார் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதை அவரது மனைவி அவதானித்துள்ளார். இயந்திரம் இயங்கக் கூடியதாக (11ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் நடந்தது போன்ற சம்பவம் மீண்டும் நடக்க இடமளிக்கப்படமாட்டாதாம்!

### அங்குள்ள பள்ளிவாசலில் வைத்து பிள்ளையான் உறுதியளிப்பு

கொழும்பு, மே 24

காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் போன்றதொரு மோசமான சம்பவம் மீண்டும் இடம்பெறாதிருக்கத் தாம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வர் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் காத்தான்குடி முஸ்லிம்களுக்கு வாக்குறுதியளித்துள்ளார்.

அவர் முதலமைச்சரானமையைப் பொறுக்கமுடியாத (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, மே 24

'த நேஷன்' ஆங்கில வார இதழின் பிரதி ஆசிரியர் கீத் நொயர் கடுமையான முறையில் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஊடக அடக்குமுறைக்கு எதிரான இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி, லிபேட்டிப் பிளாஸா சந்தியில் நண்பகல் 12 மணியளவில் ஒன்றுகூடிய ஊடகவியலாளர்கள் பிற்பகல் ஒரு மணிவரை அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இடம் பெற்ற களியாட்ட நிகழ்வின்போது சிறுவர்களுக்கான மின்சார ரயில் காட்சியையும் பாடகர் ஒருவர் பாடிக்கொண்டிருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

துரையப்பா விளையாட்டரங்கில்

# கண்காட்சி, கலைநிகழ்வுகள், மலிவுச்சந்தை கொண்ட பிரமாண்ட வைபவம் நேற்றுக் கோலாகல ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 24

யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் இந்த ஆண்டு வெசாக் தின விழாவின் மகுட நிகழ்வாக வர்த்தகம், பொழுது போக்கு மற்றும் கலைநிகழ்வுகள் (கார்னி வெல்)மற்றும் பொருள் காட்சியும் நேற்றுக்காலை கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப் பட்டன.

ஆரம்ப நிகழ்வில் குடாநாட்டை சார்ந்த திணைக்களங்களின் தலைவர்கள், நிறுவனங்களின் அதிகாரிகள், உள்ளூராட்சி அமைப்பின் நிர்வாகிகள், அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப்பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர் பொதுமக்களும் அங்கு பெருமளவில் காணப்பட்டனர்.

நிகழ்வில் கலைநிகழ்வுகள், இசைப் பாடல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. சிங்கள, தமிழ்ப் பாடல்கள் இசைக்கப்பட்டன. இந்தக்கலை நிகழ்ச்சிகள் பாதுகாப்புத்தரப்பினரின் இசைக் குழுவினரால் நடத்தப்பட்டது. அதில் குடாநாட்டு இளைஞர்களும் பங்களிப்புச் செய்தனர்.

பாடசாலை மாணவர்களுக்கான இலவச 'பஸ்' சேவையும் ஒழுங்கு செய்யப் பட்டு இருந்தது. தீவகம், வலிகாமம், தென் மராட்சி போன்ற தூர இடங்களில் இருந்து வரும் பாடசாலை மாணவர்களுக்காக இந்த விஷேட சேவைகள் இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை நடத்தப்பட்டன.

'பஹன் கூடுவ' என எழுதப்பட்ட வெளிச்சக் கூடுகள் இருபதுக்கு மேற் பட்டவை, மைதானத்தின் மேற்குப் பகுதி யில் அமைக்கப்பட்டிருந்தன. பகல் நேரத் திலும் ஒளிகாலும் இவை சுழன்றுகொண்டி ருந்தன. சிவில் உடைதரித்த இராணுவத்தினர் அவை குறித்து விளக்கம் அளித்தனர்.

உள்ளூரில் மலிவாக கிடைக்கும் மூலப் பொருள்களால் இந்த வெளிச்சக்கூடுகள் அமைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். பனை, தென்னை ஓலைகள், பன்னாடை, பொச்சுமட்டை, சிரட்டை, தென்னம் பாளை, தென்னை, பனை மட்டைகள், ஈக்கில், சம்பு புல், வாழைப்பொத்தியின் மடல்கள் என்பனவும் சைக்கிள் 'றிம்' மோடு இணைந்த மோட்டார்களும் பொருத்தப் பட்டிருந்தன.

**மாதிரிகள்**

கண்டிதலதாமளிகையின் மாதிரி அமைப்பு தென்னம் பொருள்களால் ஆக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

சிறிசம்பூத்த விகாரையின் மாதிரியும் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. விகாரை, அதனைச்சூழ உள்ள பழைய (சரிந்த) கருங் கல் தூண்கள், புத்தபெருமானின் சிலை வாழைப் பொத்திமடலால் அலங்காரப்படுத் தப்பட்ட தளத்தில்செய்யப்பட்டுஇருந்தது. கௌதம புத்தருக்கு குடைபிடிக்கும் நாக பாம்பு படத்தை சுருக்கிவிரித்துக் கொண்டிருந்தது.

**பொழுது போக்கு அம்சங்கள்**

இராட்டினங்கள், சுற்றிஓடும் ரயில், சுழலும் பஸ்வண்டிகள், உயரமாக அமைத்த கூடத்தில் சரிந்தோடும் மோட்டார் சைக்கிள் எனப் பலவற்றைக் கண்காட்சியில் காணமுடிந்தது. இவற்றுக்கு பாடசாலை மாணவர்களுக்கு 20 ரூபா ரிக்கெட்டும் பெரியவர்களுக்கு 30 முதல் 40 ரூபாவும் அற விடப்பட்டது.

**மலிவு விற்பனைக் கடைகள்**

மொத்தமாக 58 கடைகள் வியாபாரத் தில் ஈடுபட்டு இருந்தன. ஓடியல்மாவில் இருந்து தோலகட்டி 'வைன்'வரை காட்சிப் படுத்தப் பட்டிருந்தன. அரிசி, சீனி, குளிர் பானங் கள், உடுபுடைவைகள், 'பிஸ் கெற்றுகள்' என நாணாவிதமான பொருள் களும் அங்கிருந்தன.

பெரும்பாலானவை சந்தைவிலையிலும் குறைத்து விற்கப்பட்டன. சில பொருள்கள் குறிக்கப்பட்ட விலைகளுக்கே விற்பனை செய்யப்பட்டன.

பொதுமக்கள் பெருமளவில் கொள்வனவில் ஈடுபட்டு இருந்தனர். சங்கீத நிகழ்வுகளை பார்வையிட்டவர்களை விடக் கூடுதலானவர்கள் கடைகளைச் சூழ்ந்திருந்தனர்.

சைவச்சாப்பாட்டுக்கடை ஒன்றும் அமைக் கப்பட்டு இருந்தது. பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு பாதுகாப்புத் தரப்பினரால் மதிய உணவும் வழங்கப்பட்டது.

**பாதுகாப்பு ஏற்பாடுகள்**

பாதுகாப்பு ஏற்பாடுகள் இறுக்கமாக இருந்தன. முதலாம் குறுக்குத்தெருவில் இருந்து பிரதம தபால்கந்தோர் வரையான வீதி பொதுப்போக்கு வரத்திற்கு மூடப் பட்டு இருந்தது. வாகனங்கள் முதலாம் குறுக்கு வீதியால் திருப்பப்பட்டு வேம்படி மகளிர் கல்லூரி ஆஸ்பத்திரி வீதியால் பயணிக்க அனுமதிக்கப்பட்டன. பாதசாரி கள் மட்டுமே பிரதான வீதியால் பயணித்தனர்.

பொலிசாரும் இராணுவத்தினரும் இராணுவப்பொலிசாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடு பட்டிருந்தனர்.

பிரதான வீதி மறிக்கப்பட்ட இடத்தில் இருந்து பொதுநூல் நிலையத்தின் மேற் குப் பகுதி வரை தேசியக் கொடியால் இரண்டு பக்கமும் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. கோட்டைக்கு செல்லும் வீதியும் தேசியக் கொடிகளால் அழகு படுத்தப்பட்டு இருந்தது.

தந்தை செல்வா நினைவிடத்திலில் இருந்த சோதனைச் சாவடிகள் அகற்றப் பட்டு பழைய றீகல் தியேட்டர் சந்திக்கு பின் நகர்த்தப்பட்டு இருந்தன. (அ-302)

## மீசாலையைச் சேர்ந்த குடும்பம் நேற்றுச் சரண்

யாழ்ப்பாணம், மே23

மீசாலை மேற்கைச் சேர்ந்த ஒரு குடும்பம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத் தில் நேற்று சரண் அடைந் தது.

மீசாலை மேற்கு காளிகோயிலடியைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் நான்கு பிள்ளைகள் கொண்ட குடும்பமே சரண் அடைந்தது. (அ-1-25)


12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராஜா சேகர்

அன்னையின் மடியில் 02 ✱ 10 ✱ 1961

ஆண்டவன் அடியில் 05 ✱ 06 ✱ 1996

திதி: 24.05.2008

பன்னிரண்டாண்டுகள் சென்றும்
பாரினில் வந்துதிக்க
மறுப்பதேனோ?

கரவெட்டி கிழக்கு. (74425) குடும்பத்தினர்.



திருமண வாழ்த்து

இன்று(24.05.2008)சனிக்கிழமை அச்சுவேலி
இராஜமாணிக்கம் திருமண மண்டபத்தில்
திருமண பந்தத்தில் இணையும்



மணிராஜா - கலாஜினி
தம்பதியினர்

நல்லூர்க் கந்தனின் அருட்கடாட்சத்தைப் பெற்று
பல்லாண்டு காலம் சீருஞ்சிறப்புடன்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
வாழ்க வளமுடன்.

வாழ்த்துவோர்:
மாமா குடும்பத்தினர்.
Turbo Group Civil Engineering Construction.

Thavasikulam
Kodikamam.

(74428)



பொதுச்சுகாதார வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறிக்கான ஆள்சேர்ப்பு - 2008

வடமாகாணத்திலுள்ள பொதுச்சுகாதார வெளிக்கள உதவியாளர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு மேற்படி பயிற்சி நெறிக்கு க.பொ.த. உயர்தரம் விஞ்ஞானப்பிரிவில் சித்தி பெற்றிருப்பதுடன் க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தில் வேண்டும். 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுதிகதி 25.06.2008.

இவை தொடர்பான மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலும் சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் வடமாகாண சபையின் www.np.gov.lk இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை *பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், இல.572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 25.06.2008 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித இடதுபக்க மேல் உறையில் " *பொதுச்சுகாதார வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறிக்கான ஆள்சேர்ப்பு - 2008* " எனக் குறிப்பிடல் வேண்டும்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
வடமாகாணம்.

(சி/552965)



திருமண வாழ்த்து

இன்று(24.05.2008)சனிக்கிழமை அச்சுவேலி
இராஜமாணிக்கம் திருமண மண்டபத்தில்
திருமண பந்தத்தில் இணையும்



மணிராஜா (M.D)
(JAVA CIVIL ENGINEERING CONSTRUCTION)

கலாஜினி
(ஆசிரியை)

தம்பதியினரை நல்லூர்க் கந்தன்
அருட்கடாட்சத்தைப் பெற்றுப் பல்லாண்டு காலம்
சீரும் சிறப்புடனும்
வாழ வாழ்த்துகின்றோம்.

கண்ணபிரான்(பிரான்ஸ்)
மற்றும் நண்பர்கள்.

(74430)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிய வசதிகள் இல்லாத நிலையிலும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பிரகாசிக்கின்றார்கள் யாழ்ப்பாண வீரர்கள்

கடந்த மூன்று மாதங்களாக யாழ்.குடாநாட்டின் பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தடகள விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று முடிவடைந்துள்ளன.

இந்தவேளையில் விளையாட்டு வீரர்களிடையே சர்ச்சையும் விமர்ச னங்களும் எழுந்துள்ளன. பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விளையாட்டுத் துறைசார் வசதிகள் போதுமானதாக இல்லாமையே இதற்குக் காரணம்.

அண்மைக் காலத்தில் இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட கனிஷ்ட பிரிவு மாணவர்களுக்கான தடகளப் போட்டியில் இரு வீரர்கள் தங்கம், வெண்கலப் பதக்கங்களைப் பெற்று திரும்பியுள்ளார்கள்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வீரன் வடிவேற்கரசன் ஹரிகரன் 18 வயதுப் பிரிவில் தட்டெறிதலில் 38.33 மீற்றர் தூரம் எறிந்து முதலாம் இடத்தையும் ,அளவெட்டி அருணோதயாக்கல்லூரி வீரன் கோபாலன் கணதீபன் 20 வயதுப் பிரிவில் கோல் ஊன்றிப் பாய்தலில் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற 9 ஆண் வீரர்களும் 3 பெண் வீரர்களும் முதல் எட்டு இடங்களுக்குள் இடம்பெற்றமையும் பாராட்டத்தக்கதாகும்.

இந்த விடயம் தொடர்பாக தற்போது விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்தப் போட்டிகள் இடம்பெற்றமை தமக்குத் தெரியாதென சில பாடசாலைகளும் கழகங்களும் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கின்றன.

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இல்லாததன் காரணத்தால் தம்மால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வீரர்களைக் கொழும்புக்கு அனுப்பிப் போட்டிகளில் பங்குபற்ற வைத்ததாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாகவே தற்போது விமர்சனங்கள் எழுந்துள்ளன. போட்டிகள் நடை பெறும் வேளைகளில் அவற்றை உரியமுறை யில் அனைவருக்கும் தெரியப்படுத்தி வீரர்களை தெரிவுசெய்து போட்டிகளுக்கு அனுப்பிவைக்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும். இதற்குப் பாடசாலைகள், கழகங்கள் ஆகியனவும் தம்மாலான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இதன் ஒரு கட்டமாக மாவட்ட, பிரதேச மட்டங்களில் சில விளையாட்டு உபகரணங்கள் கொண்டு வரப்படவேண்டும். குடாநாட்டுச் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் பயிற்சி நிலையம் நடத்துகின்றோம். அனைவரும் வாருங்கள் என்று கூறுவது சாத்தியப்படாத விடயம் என்பதை அனைத்து மட்டத்தில் உள்ளவர்களும் அறிந்துகொள்வார்கள்.

பருத்தித்துறையில் இருந்து ஒரு வீரன் யாழ்ப்பாணம் வந்து திரும்புவதாக இருந்தால் ஆகக் குறைந்த போக்குவரத்துக் கட்டணமாக 100 ரூபா வேண்டும். இதேபோன்று தெல்லிப்பழையில் இருந்து, மாதகலிலிருந்து, காரைநகரில் இருந்து, நெடுந்தீவில் இருந்து வீரர்கள் வந்து செல்வதாக இருந்தால் பெரும் பணச்செலவு ஏற்படும் என்பது உண்மையானதே.

ஆகையினால் பிரதேச மட்டத்தில் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். அதற்கு வேண்டிய உபகரணங்கள் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருத்தல் அவசியமாகும். இதனைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் அனைவருக்கும் உண்டு.

## தேவையான விளையாட்டு உபகரணங்கள் இல்லாதமை பெரும் குறையாகவே உள்ளது

தற்போது கோலூன்றிப் பாய்தலில் 3ஆம் இடத்தை பெற்றுள்ள மாணவன் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் இரண்டாவது வீரன் என்பது இங்குசுட்டிக் காட்ட வேண்டியது ஆகும். கடந்த ஆண்டு தேசிய மட்டத்தில் இடம்பெற்ற பாடசாலை அணிகளுக்கு இடையேயான போட்டியில் ஒரு வீரன் 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளமையும் சுட்டிக்காட்ட வேண்டியதாகும்.

இந்தவகையில் வெற்றி பெற்ற மாணவனுக்குக் கோலூன்றிப் பாய்தலுக்கு கோல் தருவதாக அளிக்கப்பட்ட வாக்குறுதி இன்று வருடம் ஒன்றாகியும் நிறைவேறவில்லை. விளையாட்டுடன் தொடர்புடைய அதிகாரிகள் வெறும் மேடைப் பேச்சுக்களை கைவிட்டு அவற்றை செயலில் நிரூபிக்கவேண்டும் அது தான் சிறந்த சேவை.

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

குறிப்பிட்ட வீரன் இன்று உபகரணமும் இல்லை. பயிற்சியும் இல்லை என்ற நிலையிலேயே உள்ளார். தற்போது 3 ஆம் இடத்தைப் பெற்ற மாணவன் கூட தேசிய மட்டப் போட்டிக்கு கோலின்றிச் சென்று அங்கு கோல் பெறுவதில் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துத் தனது திறமையை வெளிப்படுத்தி வந்துள்ளார்.

இந்தப் பரிதாப நிலைமை குறித்து அனைவரும் சற்று சிந்தித்துச் செயலாற்ற வேண்டியுள்ளது.

யாழ்.குடாநாட்டு மக்கள் பெரும் நெருக்கடிக்குள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்தி வருகின்றார்கள்.

அந்தவகையில் எமது இளம் தலைமுறை இன்று நெருக்கடிக்குள் பிறந்து நெருக்கடிக்குள் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. இவர்களின் உயர்வும், வாழ்வும் இம் மண்ணில் வாழும் ஒவ்வொருவரினதும் செயற்பாட்டில் தங்கியுள்ளது.

உயரம் பாய்தல், கோலூன்றிப் பாய்தல் போட்டிகளுக்கான மெத்தைகள் இங்கு போதியளவில் இல்லை. கோலூன்றிப் பாய்தலுக்கான நவீன தடிகள் போதாது. தடைதாண்டலுக்கான சட்டங்கள் இல்லை. இத்தகைய பல தேவைகளும் விளையாட்டுத் துறைக்கும் வளர்ச்சிக்கும் அத்தியவசியமாகக் காணப்படுகின்றன.

இதனை நிவர்த்தி செய்யவேண்டிய கடப்பாடு விளையாட்டுத் துறையுடன் தொடர்புடைய அனைவருக்கும் உண்டு. விளையாட்டை மேலும் வளர்க்கவேண்டுமானால் எமக்குள் இடம்பெறும் விமர்சனங்கள், போட்டிகளை விடுத்து விளையாட்டை வளர்ப்பதை இலக்காகக்கொண்டு செயற்படுவதே சிறந்தது.

கடந்த எட்டு வருடங்களுக்கு முன்னர் காலைவேளையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் சிறந்த ஒரு பயிற்சி நிலையம் சுதந்திரமான முறையில் இயங்கியது. 50இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றார்கள். சாதனைகள் நிகழ்த்தினார்கள். இவர்களில் பலர் இன்று உடற்கல்வி ஆசிரியர்களாக கல்வியியற் கல்லூரி மூலம் உருவாகி பாடசாலைகளில் கற்பிக்கின்றார்கள்.

இதேபோன்று மீண்டும் விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்கள் பொதுவான பயிற்சி நிலையம் ஒன்றை நடத்த முன்வரவேண்டும்.

விளையாட்டை வளர்த்தெடுக்க வேண்டியதும் தேசிய மட்டத்திலான சாதனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவேண்டியதும் தற்போது முக்கியமாகும். இவை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி , சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பல திறமையான வீரர்கள் உள்ளனர்.

இதேபோன்று ஏனைய பாடசாலைகளிலும் இளம் வீர, வீராங்கனைகள் காணப்படுகின்றார்கள். இவர்களை இனம்கண்டு உரிய பயிற்சிகளை வழங்கி மாகாண, தேசிய மட்டங்களில் மிளிரச் செய்வற்கு அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்னிலங்கையில் பயன் படுத்தப் படும் விளையாட்டு உபகரணங்களை எமது வீரர்களும் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இதன் மூலம் எமது வீரர்களும் தேசிய மட்டத்தில் பல்வேறு சாதனைகளைப் படைப்பார்கள்.

வின்னன்

# வாசகர் திருமுகம்

## ஆடி அமாவாசையும் சூரிய கிரகணமும்

இறைவனுக்கு சூரியன், ஸோமன்,அக்கினி என்னும் மூன்று கண்கள் உள்ளன. அந்தக் கண்களில் "சூரியன்" சூரிய கிரகண காலத்தில் மறைக்கப்படுகின்றது. சந்திர கிரகண காலத்தில் "ஸோமன்" மறைக்கப்படுகின்றான். இந்தக் கிரகண காலங்களில் ஆலயங்களில் பூஜை செய்யக்கூடாது.

சர்வதாரி வருஷம் ஆடி மாதம் 17ஆம் நாள் (01.08.2008) வெள்ளிக்கிழமை ஆடி அமாவாசை தினத்தில் மாலை 4.50இற்கு சூரிய கிரகணம் நிகழ இருக்கின்றது. அன்றைய தினம் கிரகணத்தால் தோஷமடைகின்றது. அன்று தீர்த்தோற்சவம் செய்யக் கூடாது.

சர்வதாரி வருஷம் ஆவணி மாதம் முதலாம் நாள் சனிக்கிழமை பௌர்ணமியன்று இரவு 1.05 இற்கு சந்திரகிரகணம் நிகழ இருக்கின்றது. அத்துடன் அன்று மாலை 5.24 இற்கு சங்கிராந்தி நிகழ இருக்கின்றது. சங்கிராந்தி தோஷத்தில் தீர்த்தோற்சவம் செய்யக் கூடாது.

ஆகவே ஆடி அமாவாசை தினமன்று (01.08.2008) வெள்ளிக்கிழமையும் (16.08.2008) சனிக்கிழமையும் தீர்த்த உற்சவம் செய்யவேண்டிய ஆலய தர்மகத்தாக்கள் முதல் தினத்தில் தீர்த்தம் அமையத்தக்கதாக விழாக்களை ஒழுங்குபடுத்திக்கொள்ளுதல் சிறந்ததாகும்.

*சி.சிதம்பரநாதக்குருக்கள், திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர்.*

## இறைச்சிக் கடை இருந்தால் இந்த நிலைமை ஏற்படாது

வேலணைக்குட்பட்ட பிரதேசத்தில் அனுமதி பெற்ற மாட்டிறைச்சிக் கடை இல்லை. இங்குள்ள மக்கள் இறைச்சி வேண்டுவதற்காக புங்குடுதீவு அல்லது ஊர்காவற்றுறை போன்ற இடங்களுக்குப் போகவேண்டியுள்ளது.

இந்நிலையில் வேலணையில் மாடு வெட்டும் கொல்களனும் புதிதாக கட்டியுள்ளார்கள். இங்கு கள்ள மாடு அடித்து சிலர் விற்கின்றார்கள். மிகுதியான தலை, தோல், கால் என்பவற்றை பாழடைந்த கிணறுகளுக்குள் வீசுகின்றார்கள். இதில் மிகுதியான கழிவை நாய்கள் இழுத்துச் சென்று பல இடங்களிலும் போட்டு விடுகின்றன. மக்கள் இதனால் பெரும் சுகாதாரக் கேடுகளை அனுபவிக்கின்றனர். வேலணை பிரதேச சபைக்குள் அனு மதி பெற்ற மாட்டி றைச்சிக் கடை ஒன்று இருந்தால் சுகாதார முறைப்படி இதனைக் கையாண்டால் பாவனையாளருக்கு நன்மையாக இருக்கும். மாடுகளுக்கும் சுதந் திரம் கிடைக்கும். வேலணையில் முன்னர் இரண்டு மாட்டிறைச்சிக் கடைகள் இருந் தன என்பதை மக்கள் ஞாபகப்படுத்துகின்றார்கள்.

*வே.திருநாவுக்கரசு, வர்த்தக சங்கம், வேலணை.*

## மரத்தை வீழ்த்தியமைக்கு மக்கள் பாராட்டு

ஆனைக்கோட்டை முத்தநயினார் ஆலய தெற்கு வீதியை அண்மித்து நின்ற சுமார் 200 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த பாரிய மருதமரம் பழுதடைந்த நிலையில் எந்தநேரமும் சரிந்து விழுந்து ஆபத்து ஏற்படும் என்ற காரணத்தால் ஆலய நிர்வாகத்தினர் மரக்கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் தொடர்புகொண்டதால் மரக்கூட்டுத்தாபன அதிகாரிகள் மூன்று நாள்கள் பிரதான வீதியைத் தடைசெய்து அருகாமையிலுள்ள கோயிலுக்கோ, கடைகளுக்கோ எதுவித சேதமும் இல்லாமல் மரத்தை அரிந்து வீழ்த்தினர்.

இதனை நேரில் பார்த்தவர்கள் மரத்தின் பழுதையும் அதனால் ஏற்படவிருந்த ஆபத்தையும் உணர்ந்து ஆலய நிர்வாகத்தினருக்கு நன்றி தெரிவித்தார்கள்.

பொன்.கனகரத்தினம், ஆனைக்கோட்டை.

## பாடசாலையில் பயன்படுத்தும் வெண்கட்டி (Chalk) செய்யும்முறை

கழிக்கப்பட்ட களிக்கல் தூள்கள் (**Plaster of Paris**) வெண்கட்டி தயாரிப்பதற்கு தேவைப்படும் பிரதான மூலப்பொருளாகும். கழிக்கப்பட்ட பிளாஸ்ரர் ஒப்பரிஸ் மூலம் செய்த அச்சுகளையும், சிலைகளையும் பயன்படுத்தலாம். இவைகளை தூளாக உடைத்தல்வேண்டும், சுத்தியலை உபயோகித்து இவற்றை உடைக்கமுடியும். உடைத்த தூள்களை (**Pieces**) அரைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் மாவாக (**Powder**) அரைத்தல் வேண்டும். சிறு உரல் உலக்கை ஆகியவற்றின் உதவியுடன் இவ்வாறு செய்யலாம்.

பின்னர் ஓர் அரிதட்டின் உதவியுடன் அரித்து மாவாக வேறுபடுத்தல் வேண்டும். இப்பவுடரை ஒரு பாத்திரத்திலிட்டு 180°C உஸ்ணத்திற்கு சூடாக்கவேண்டும். மாவில் உள்ள ஈரத்தன்மையை அகற்றுவது சூடாக்குவதின் நோக்கமாகும். பின்னர் ஆறவிட வேண்டும். திரும்பவும் ஓர் அரிதட்டின் உதவியுடன் அரித்து பவுடரை வேறாக்க வேண்டும்.

இந்தப் மாவுக்கு தேவைப்பட்டளவு பீங்கான் செய்யும் மென்மையான வெண்ணிறக் களிமண் பவுடர் (**Kaolin**) இட்டு பாத்திரத்திலிட வேண்டும். வர்ணங்கள் தேவைப்படின் சிறிதளவு சேர்க்கலாம். இதனுள் நீர் ஊற்ற வேண்டும். 5 இறாத்தல் பவுடருக்கு 3 பைந்து நீர் போதுமானதாகும். பின்னர் நன்றாகக் கலக்கவேண்டும். கலப் பதற்கு **beater** ஐயும் பயன்படுத் தலாம்.

இக்கலவையை இறப்பரால் செய்யப் பட்ட அச்சின் துவாரத்தினுள் (**Chalk Mould**) ஊற்றவேண்டும். இறப்பரினால் செய்யப்பட்ட அச்சினை பயன்படுத்துவது நல்லதாகும். ஏனெனில் வெண் கட்டிகளை இலகுவாக அச்சிலிருந்து கழற்ற முடியும். இவ்வாறு ஊற்றப்பட்ட அச்சினை சூரிய ஒளியில் ஒருநாள்வரை வைத்த பின்னர் வெண்கட்டிகளை கழற்றி சிறு கடதாசிப் பெட்டிகளில் சேகரிக்கலாம்.

தொகுப்பு:- என். ஜே. இரத்தினதயா,
*உதவி தொழில் நுணுக்க வல்லுநர், மாவட்டக் காரியாலயம், கைத்தொழில் அபிவிருத்திச்சபை, யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படையின் தாக்குதலிலிருந்து மீனவர்களைப் பாதுகாக்கப் புதிய நடைமுறை

அதிராம்பட்டினம், மே 24

இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களிலிருந்து மீனவர்களைப் பாதுகாக்கும் விதமாக, தமிழக கடல் பகுதி 3 மண் டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டல படகுகளையும் அடை யாளம் காண வெவ்வேறு வர்ணம் பூசக் கடற்படை உத்தர விட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது, கண்ணிவெடிகளில் சிக்காமல் இருப்பதுபோன்றபிரச்சினைகளிலிருந்துதமிழக மீனவர்களைக் காப் பாற்றுவது தொடர்பான, மீனவர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் தஞ்சை மாவட்டம் அதிராம்பட் டினம் மறவக்காட்டில் கடந்த புதன்கிழமை நடந்தது.

இக்கூட்டத்திற்கு கடற்படை அதிகாரிகள் ஏ.பி. சிங், லாரன்ஸ் ஆகியோர் தலைமை வகித்தனர். கடலோரப் பாதுகாப்புக் குழும டி.எஸ்.பி. அம்சவல்லி, இன்ஸ்பெக்டர் வேணுகோபால், மீன்துறை ஆய்வாளர் ராஜேஸ்வரன், வனத்துறை அதிகாரி நல்லுசாமி, அலையாத்திகாடுகள்பாதுகாப்புச்சங்கத்தலைவர் சங்கர், செயல ளார் பாலு மற்றும் 100இற்கும் மேற்பட்ட மீனவர்கள் பங் கேற்றனர்.

தமிழக மீனவர்களைப் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி கடற்படை அதிகாரிகள் கூறி யவை வருமாறு:-

தமிழகக் கடற்பகுதி 3 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளது. சென்னை முதல் கடலூர் மாவட்டம் வரை வடக்கு மண்டலம். இப்பகுதி மீனவர்கள் தங்கள் படகுகள், விசைப்படகுகளுக்கு ஒளிரும் வகை மஞ்சள் நிற வர்ணம் பூசவேண்டும்.

நாகை மாவட்டம் முதல் ராமேஸ்வரம் வரை மத்திய மண்டலம். இங்குள்ள மீனவர்கள் தங்கள் படகுகளுக்கு ஒளிரும் வகையிலான ஆரஞ்சு நிற வர்ணம் பூசவேண்டும்.

ராமேஸ்வரம் முதல் குமரி வரை தெற்கு மண்டலம். இங்குள்ளவர்கள் ஒளிரும் வகையிலான பச்சை நிற வர்ணம் பூச வேண்டும். இதன் மூலம் எல்லை தாண் டும் மீனவர்களைக்கண்டுபிடித்து தடுத்து நிறுத்த முடியும். இலங்கைக் கடற்படையும் தமிழக மீனவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

29ஆம் திகதிக்குள் வர்ணம் பூசாவிட் டால் படகுகளுக்கு வழங்கப்படும் டீசல் மானியம் நிறுத்தப்படும். மீன்பிடிக்கச் செல்லும்போது அடையாள அட்டை, பட கின் உரிமம் ஆகியவற்றை கட்டாயம் வைத்திருக்க வேண்டும். கடல் பகுதியில் அன்னியர்கள் நடமாட்டம் இருப்பதாகத் தெரிந்தால் கடலோரப் பாதுகாப்புப் படை அல்லது மீன்துறை அதிகாரிகள் மூலம் தக வல் தெரிவிக்க வேண்டும் - என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (சி)

## ஆலயத் தூண்கள் விற்பனைக்கு

15 அடி உயரமும் 4 அடி சுற்றளவும் உள்ள 14 தூண்கள் மற்றும் ஒரு பெரிய கருங்கல் என்பன விற்பனைக்கு உண்டு.

திருப்பணிச்சபை

ஸ்ரீ விஸ்வலிங்க பிள்ளையார் கோயில்

(முருகமூர்த்தி பிள்ளையார் கோயில்)

முருகமூர்த்தி வீதி,

வண்ணார்பண்ணை.

T.P:060 221 9547

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
சிவகுமார் தினேஷ்
அவர்களின் அன்புத் தந்தை

அமரர் ஆறுமுகம் சிவகுமார்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/வட்டு. மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.
(74415)

## ஓராண்டின் நினைவலைகள்

தோற்றம்
30
04
1920



மறைவு
04
06
2007

**திருமதி தில்லைமலர் பசுபதி**

(முன்னாள் ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி)

*திதி: சதுர்த்தி (24.05.2008)*

கல்விப் பரப்பினிலே கலைமகளாய் ஆட்சி செய்தாய்!
சொல்லில் செயலிலென்றும் மலைமகளாய் உறுதி கொண்டாய்!
செல்லுமிடமெல்லாம் திருமகளாய் பொலிவு பெற்றாய்!
இல்லம் நிறைந்தாய்! இன்றெம் இதயங்களில் கோயில் கொண்டாய்!

உடுவில் மேற்கு,
சுன்னாகம். (74410)

பாச நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## 15ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
01
01
1954



இறப்பு
07
06
1993

**திருமதி நகுலராஜா நகுலேஸ்வரி**

(நகுலேஸ்)

(அம்பன், குடத்தனை, வடமராட்சி கிழக்கு)

*திதி: சதுர்த்தி (24.05.2008)*

அன்பின் திருவிளக்கே நீ அணைந்து
அகவை பதினைந்து ஆச்சு
நிமிர்ந்த நடையுடனே நித்தம்
சிரிப்புடனே பவனித்த முழு நிலவே!
நேற்றுப்போல் பசுமையாய் அத்தனையும்
எம் நெஞ்சத்தில் .
ஓங்கி எரியும் நீ உன் உடலை தின்றாலும்
உன் ஒளி முகத்தை எம் கண்கள் மறக்குமா?

அம்பன், குடத்தனை.
ராஜன் ஹாட் வெயர், பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.
(74418)

## கடற்படையால் கைது செய்யப்பட்ட 19 இலங்கை மீனவர்கள் விடுதலை

ராமநாதபுரம், மே 24

இந்திய அரசின் வேண்டுகோளின்படி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 19 மீனவர்களையும் இலங்கை நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்துள்ளது என அறிவிக்கப்பட்டது

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

ராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடம் மாந்தோப்புப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 19 பேர் 4 நாட்டுப்படகில் இம் மாதம் 5ஆம் திகதி ஒருவாரம் கடலில் தங்கி மீன் பிடிக்கச் சென்றனர். இவர்கள் இம் மாதம் 14ஆம் திகதிவரை கரை திரும்பாததால், பதற்றம் ஏற்பட்டது.

இந்த நிலையில், 19 இந்திய மீனவர்களைக் கைதுசெய்ததுடன் அவர்கள் வந்த படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் பறிமுதல் செய்தனர். பின்னர் அவர்களை அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் ஆர்.கிர்.லோஷ்குமார் மற்றும் அதிகாரிகள் மீனவர்களை விடுவிக்க அரசின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரிடம் பிடிபட்ட மீனவர்கள் 19 பேரும் அவர்களது படகுகளுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

## வேலை ஆள்கள் தேவை

* சமையல் வேலை தெரிந்தவர்கள்.
* சமையல் உதவியாளர்.
* உணவு பரிமாறுபவர்.

வயது : 18 - 45 வரை

நேரம் : பி.ப 3 மணிக்கு பின்

நேரில் வரவும்.

**லவ்லி கூல் பார்**

பிரதான வீதி,
நெல்லியடி.

## கண்ணீர் அஞ்சலி

கழக மூத்த உறுப்பினர்
லயன் நடேசன் ஸ்ரீகரன் (முகாமையாளர் HNB)
அவர்களின் பாசமிகு தாய்

திருமதி **மகேஸ்வரி நடேசன்** அவர்கள்

கடந்த 16.05.2008 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். இத்துயர் செய்தியால் கவலையடைந்து இருக்கும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. குறள்-102

சாவகச்சேரி.
- லயன்ஸ் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின்
ஆசிரியரும் கணினிப் பொறுப்பாசிரியருமான

*திருமதி*
*விஜயானந்தி ஜெகதீஸ்வரன்*
[B.Sc. (Hons), P.G.D.E., M.Ed.]

அவர்களின் அகால மறைவினால்அதிர்ச்சி அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திஅடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கல்லூரிச் சமூகத்தினர்,
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி, உரும்பிராய்.
(74431)

## மரண அறிவித்தல்கள்

### *சின்னத்தம்பி தெய்வேந்திரன்*



(இந்திரன் மாஸ்ரர்)

மல்லாகம், காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தாண்டிக்குளம், வவுனியாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தெய்வேந்திரன் (இந்திரன் மாஸ்ரர்) 22.05.2008 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வனிதாமணியின் அன்புக் கணவரும் டினேஸ், ரேவதி, துவாரகா, கோபிதாஸ், கோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், சிவனேசன் மற்றும் சிவதொண்டன், ஈஸ்வரி ஆகியோரின் சகோதரனும் கஜேந்திரன் (பொபி)இன் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் வீதி,
தாண்டிக்குளம்,
வவுனியா. (74420)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

### *சின்னையா கனகசிங்கம்*

குப்பிழான் வீரபத்திர கோயிலடியைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கனகசிங்கம் நேற்று (23.05.2008) வெள்ளிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-ஆச்சிமுத்து தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான அருளம்மா, அரும்பலம், குமாரசாமி மற்றும் கணேசம்மாவின் அன்புச் சகோதரரும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் மகேசதாசன், இந்திராணி, சிங்கதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2008) சனிக்கிழமை மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனோன்மணி வாசா,
விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (74426)

தகவல்:
ந.சிவலிங்கம் (மைத்துனர்),
திருமதி சிவலிங்கம் கணேசம்மா
(சகோதரி).

### *திருமதி மேரிப்பிள்ளை யோசவ் (இராசம்மா)*

இளவாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிப்பிள்ளை யோசவ் நேற்று (23.05.2008) வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் யோசவ் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அதிரியாம்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஆசீர்வாதம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை (முன்னாள் பொலிஸ் அதிகாரி) அவர்களின் அன்புச் சகோதரியும் சாள்ஸ் பத்திமாநாதன் (Holland), யோசவ் பற்பநாதர் (யுவராசா, முன்னாள் உத்தியோகத்தர், லங்கா சிமெண்ற் லிமிட்டட்), எட்வின் பத்மநாதன் (றோய், Holland) ஆகியோரின் பாசமிகு தாயும் அன்ரனிற்ற வத்சலா (ஆசிரியை, யாழ்./கொழும்புத்துறை M/V), தரளம் (Holland) ஆகியோரின் மாமியும் பிறயன், றொயின் (Holland) ஆகியோரின் பாசமிகு பாட்டியும் நியூட்டன் (இளவாலை) அவர்களின் மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8A, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (74427)

தகவல்:
யுவராசா (மகன்),
T.P.: 0779672122.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாது குமுறுகின்ற சமர்க்களங்களை ஓய்வில்லாது எதிர்கொண்ட வீரபுருஷன்

## பிரிகேடியர் பால்ராஜுக்கு புலிகளின் தலைவர் புகழாரம்



கொழும்பு,மே24

இமாலய வெற்றிகள் பலவற்றுக்கு நடுநாயகமாகநின்று செயற்பட்டவர் பிரிகேடியர் பால்ராஜ்.

- இவ்வாறு புகழாரம் சூட்டியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்.

பிரிகேடியர் பால்ராஜின் மறைவு குறித்து அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைக்கான நீண்ட பயணத்திலே எமது சுதந்திர இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கின்றது. மகத்தான இராணுவ வெற்றிகளைக் குவித்திருக்கின்றது. இந்த இமாலய வெற்றிகள் பலவற்றுக்கு நடுநாயகமாக நின்று, எமது சண்டையணிகளையும் மரபுப் படையணிகளையும் வழிப்படுத்தி, நெறிப்படுத்திச் சமராடிய எமது வீரத்தளபதி பால்ராஜ் இன்று எம்முடன் இல்லை. இவரது இழப்பால் எமது தேசம் ஆற்றமுடியாத துயரத்திலும் ஆழ்ந்த வேதனையிலும் இன்று மூழ்கிக் கிடக்கிறது.

பொதுவாகவே, விடுதலை இலட்சியத்தில் பிடிப்பு ஏற்பட்டுவிட்டால், எமக்கு துன்ப துயரங்கள் தெரிவதில்லை. வேதனைகள் புரிவதில்லை. உடல் உபாதைகள் அழுத்துவதில்லை. இயற்கை கூடக் குறுக்கே நிற்பதில்லை. எனது அன்புத் தளபதி பிரிகேடியர் பால்ராஜுக்கும் அப்படித்தான். ஓயாது குமுறும் சமர்க்களங்களையெல்லாம் அவன் ஓய்வில்லாது, உறக்கமில்லாது எதிர்கொண்டான். அங்கு இரவு, பகல் பாராது செயற்பட்டான். கொட்டும் மழையும், கோடையின் வெய்யிலும் அவனைக் கட்டிப்போட்டது கிடையாது. கொடிய சண்டைக் களங்களில் எல்லாம் எத்தனையோ துன்பங்களைச் சுமந்தவாறு, எத்தனையோ நெருக்கடிகளைச் சமாளித்தவாறு, எத்தனையோ ஆபத்துகளை எதிர்கொண்டவாறு அபாரமான மனவுறுதியோடு போராடினான்.

தலைசிறந்த போர்த்தளபதி என்ற வகையில் நான் அவனை ஆழமாக நேசித்தேன். அவன் மீது அளவுகடந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தேன். அவன் அறிமுகமாகிய நாளிலிருந்து அவனுள் அபூர்வ போர்ப் பண்புகளும், போர்க் குணங்களும் இயற்கையாகவே நிறைந்து கிடப்பதைக் கண்டுகொண்டேன். ஆற்றல்மிக்க, ஆளுமைமிக்க இலட்சியப் போராளியாக அவனை வளர்த்தெடுத்தேன். அபாரமான துணிவும், அசுர வேகமும், சிறந்த தாக்குதல் உத்திகளும், நேர்த்தியாகப் படை நகர்த்தும் ஆற்றலும், கூட்டுக் குலையாத குறிதவறாத செயற்பாடுகளுமாக அவன் வெளிப்படுத்திய போர்ப் பண்புகள் எமது எதிரிக்கு அச்சத்தைக் கொடுத்தன. அதேநேரம், எமது போராளிகளின் மனோதிடத்தையும் இலட்சிய உறுதியையும் மேலும் உரமாக்கின. எமது மக்களுக்கு பெரும் வெற்றிகளைத் தேடித் தந்தன.



பிரிகேடியர் பால்ராஜ் எம்மைவிட்டு எங்கும் போய்விடவில்லை. எமது தேசத்தின் சுதந்திர மூச்சாக எம்மையெல்லாம் உள்ளிருந்து இயக்குகின்ற இலட்சிய நெருப்பாக அவன் என்றும் எம்முள் எரிந்துகொண்டிருப்பான் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,மே24

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு இன்று நடத்தப்படவிருந்த செயலமர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்தார். (202)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே24

வலிகாமம் தெற்கு மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சத்துணவு வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'போரூட்' நிறுவனப் பிரதிநிதிகள் வருகை தரவுள்ளதால் முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துரையாடலுக்கு வருகை தருமாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கேட்டுள்ளார். (202-207)

# வெள்ளைவானில் வந்தோரால் மட்டக்களப்பில் குடும்பஸ்தர் கடத்தல்

கொழும்பு,மே24

வெள்ளை வானில் வந்தவர்களால் மோட்டார் சைக்கிளுடன் கடத்திச் செல்லப்பட்ட தனியார் பாதுகாப்பு உத்தியோத்தரான தமது கணவரைக் கண்டுபிடித்துத் தருமாறு வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்பப் பயிற்சிப் பிரதியமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனிடம் காணாமல் போனவரின் மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து அமைச்சரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:-

மட்டக்களப்பு, நொச்சிமுனையை வசிப்பிடமாகக் கொண்ட 35 வயதுடைய இளம் குடும்பஸ்தரான தில்லையம்பாடி முரளீதரன் என்பவரே இவ்வாறு கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார் என்று மனைவியான எம்.சுலோஜினி தெரிவித்தார். இச்சம்பவம் குறித்து மட்டக்களப்பு மனித உரிமைகள் குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

'வேல்ட்விஷன்' நிறுவனத்தின் பாதுகாப்பு அதிகாரியாகப் பணிபுரியும் முரளீதரன் கடந்த 4ஆம் திகதி காலை வேலை முடிந்து தனது ஈ.பி-எம்யூ-2404 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது அவரை இடைமறித்த வெள்ளை நிற சி.பி.எல்.ஏ. - 6308 என்ற இலக்கத் தகடுடைய வானில் வந்தவர்கள் மோட்டார் சைக்கிளுடன் முரளிதரனை கல்முனை,நொச்சிமுனையில் வைத்து கடத்திச் சென்றனர் எனக் கூறப்படுகிறது.

கடத்தப்பட்ட தனது கணவர் தற்போது வெலிகந்தை காட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனத் தகவல் கிடைத்துள்ளது எனவும் இது எந்த அளவில் உண்மையானது எனப் புரியவில்லை என்று தெரிவித்த சுலோஜினி தனது கணவனை மீட்டுத்தருமாறு கோரினார். (சி)

# எத்தடை வரினும் யுத்தம் தொடரும்

## அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா கூறுகின்றார்

கொழும்பு,மே24

அனைத்துலகம் எத்தகைய தடைகளை விதித்தாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு மேற்கொண்டுவரும் யுத்தம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதே அரசின் முன்பாக உள்ள பாரிய பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அரசு ஒருபோதும் பின்நிற்காது. குறிப்பாக அனைத்துலக சமூகம் எத்தகைய தடைகளை விதித்தாலும் புலிகளுக்கு எதிரான யுத்தம் தொடரும்.

இலங்கையில் உள்ள உள்ளூர் மற்றும் அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் அரசுக்கு எதிராகக் கடுமையான பிரசாரங்களை முன்னெடுத்தன. ஐக்கிய தேசியக் கட்சியும் இத்தகைய பிரசாரங்களை முன்னெடுத்தது. இவை அனைத்தும் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களேயாகும்.

### டுட்டு, கார்ட்டர் கூறும் பொய்யான தகவல்கள்

தென்னாபிரிக்காவின் டெஸ்மன் டுட்டு, அமெரிக்காவின் ஜம்மி காட்டர் ஆகியோர் இலங்கை தொடர்பான பிழையான தகவல்களைக் கொடுத்துள்ளனர்.

இத்தகைய காரணங்களால்தான் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் இடம்பிடிக்க இலங்கையால் முடியாதுபோயுள்ளது.

எனினும், இலங்கையை 101 நாடுகள் ஆதரித்துள்ளன. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பிடிக்க முடியாமல் போனதால் ஒன்றும் நடந்துவிடாது. அக்குழுவில் வாக்களிக்க முடியாமல் போகுமே தவிர எமது கருத்துக்களை சுதந்திரமாக தெரிவிக்கமுடியும்.

எதிர்வரும் காலங்களில் இலங்கைக்கு எதிராக எழும் குற்றச்சாட்டுக்களை முறியடிக்கும் வகையில் புதிய வியூகங்களை வகுத்துச் செயற்பட நாம் திட்டமிட்டுள்ளோம். புதிய வியூகங்களின் அடிப்படையில் செயற்பட்டு எமக்கான இடத்தைப் பிடிப்போம். விமர்சனங்களைக் கண்டு நாங்கள் அஞ்சப் போவதில்லை.

### ரணில் தலையிடத் தேவையில்லை

ஆடை ஏற்றுமதிக்கான கோட்டா முறையை தக்கவைத்து ஒரு ஜனநாயக அரசு என்ற வகையில் எமக்கு முடியும். இதில் தேவையற்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க தலையிடத் தேவையில்லை. அவரைத் தலையிடுமாறு அரசு கோரவும் இல்லை - என்றார். (சி)

# வடமராட்சி கிழக்கிலுள்ள முன்பள்ளிகளுக்கு சத்துணவு வழங்க விரைவில் நடவடிக்கை

வடமராட்சி,மே24

வடமராட்சி கிழக்கிலுள்ள 5 முன்பள்ளிகளின் சிறார்களுக்கும் சத்துணவு வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என பருத்தித்துறை பிரதேச சபைச் செயலர் சி.பசுபதி தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்தில் 5 முன்பள்ளிகள் உள்ளன. இம்முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவு வழங்க எவரும் இதுவரை கோரிக்கையை முன்வைக்கவில்லை. எனினும் சிறார்களின் நலனைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு சத்துணவு விரைவாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதைவேளை இப்பிரதேசத்திலுள்ள சுடர்ஒளி முன்பள்ளிக்குரிய ஆசிரியரின் வரவு ஒழுங்கீனமாக உள்ளது என பிரதேச சபைச் செயலாளர் முறைப்பாடு தெரிவித்துள்ளதையடுத்து இது குறித்து தாம் நடவடிக்கை எடுப்பதாக உதவி அரசாங்க அதிபர் மா.சிறிஸ்கந்தகுமார் தெரிவித்துள்ளார். (202-236)

# தென்மராட்சியில் இரவு வேளைகளில் மணல் திருடப்படுவதாக மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே24

வரணி, நாவற்காடு, கரம்பைக்குறிச்சி ஆகிய இடங்களிலிருந்து தினமும் இரவு வேளைகளில் வாகனங்களில் சட்டவிரோதமாக மணல் கொண்டு செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் முறையிடுகின்றனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் காணிகளில் இரவுவேளைகளில் பெருமளவு மணல் வாகனங்களில் கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவித்தனர்.

மக்கள் வீதிகளில் நடமாட்டம் குறைந்த நேரத்தில் பி. ப. 6.00 மணிக்கு அதிகாலை 5 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் தினமும் 50இற்கு மேற்பட்ட வாகனங்களில் மணல் ஏற்றப்பட்டு வரணி மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள வீதி ஊடாக வலிகாமம் பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவித்தனர். (202 -207)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மருந்துகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,மே24

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குரிய இரண்டாம் கந்தாய மருந்து வகைகள் நேற்றுமுன்தினம் சுகாதார திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டன.

வைத்தியசாலையில் பனடோல் உட்பட பல மருந்து வகைகளுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (202-207)

# சமய சந்நிதிகளில்

வடமராட்சி,மே24

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் மணவாளக்கோலத் திருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பகல் விசேட பூசைகள், ஆரதனைகள் இடம்பெறுவதைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று, அதன் பின்னர் பிற்பகல் 4 மணிக்கு சுவாமி வெளிவீதி உலா வந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பார். (202-236)

* * *

நல்லூர் மே.24

யாழ்ப்பாணம் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்தி ஐந்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-111)


# அம்பன் அரசினர் வைத்தியசாலையை பழைய இடத்தில் இயக்க நடவடிக்கை

வடமராட்சி,மே24

அம்பன் அரசினர் வைத்தியசாலையை மீண்டும் பழைய இடத்தில் இயக்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் எம்.சிறிஸ்கந்தகுமார் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வைத்தியசாலைக்கான அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை குடத்தனை வடக்கில் 'யுனெப்ஸ்' நிறுவனத்தில் கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் பூர்த்தியடையாமல் உள்ளது. இக்கட்டடத்தை பூர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளுமாறு யுனெப்ஸ் நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (202-236)



கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலையின் பயன்பாட்டிற்கென கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினர் தாம் பயன்படுத்தி வந்த கணனி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

நிறுவன அதிகாரி பாடசாலை அதிபர் ச.லலீசனிடம் கணனியைக் கையளிப்பதையும் அருகில் உதவிப் பங்குத்தந்தை பே.பெனிக்னன் அடிகளார், யாழ்.வலய ஆரம்பக்கல்வி [illegible] ஸ்ரீரஞ்சினி இராமநாதன், ஆசிரியர் த.திருமால் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை
# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் திருக்கோயில்
# மகோற்சவ- கொடியேற்றத் திருவிழா

மெய்யடியார்களே!

மங்களகரமான சர்வதாரி வருஷம் வைகாசித் திங்கள் 12ஆம் நாள் (25.05.2008) ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 10 மணியளவில் கொடியேற்ற வைபவம் இடம்பெற அம்பாள் திருவருளள் பாலித்துள்ளார். எனவே அத்தருணம் அடியார்கள் வருகை தந்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| காலை | 09 மணிக்கு | வசந்த மண்டபப் பூசை |
| முற்பகல் | 10 மணிக்கு | கொடியேற்ற வைபவம் |
| முற்பகல் | 11 மணிக்கு | அம்பாள் விசேட அலங்காரத்துடன் வீதியுலா |
| நண்பகல் | 12 மணிக்கு | புதிதாக அமைக்கப்பட்ட அன்னபூரணி அலங்கார மண்டத் திறப்பு விழாவும் அன்னதான நிகழ்வும் |

## விசேட மேளக்கச்சேரி

**கோண்டாவில் காலபூஷணம்**
**V.K.கானமூர்த்தி அவரது புதல்வன்**
**கிருஷ்ணதாசன் குழுவினர்**
**இணுவில் N.R.கோவிந்தசாமியின்**
**புதல்வர்கள்**
*(ஈஸ்வரஞான சாயித்திய இசை அரசு)*

**கொடியேற்றத் திருவிழா உபயகாரர்.**

## மகோற்சவ பிரதமகுருவின் அருளாசியுரை



யாழ்ப்பாணத் திருநகரை அணி செய்யும் ஆலயங்களுள் பூர்வீக சரித்திரப் பெருமைகளோடு பிரசித்தி பெற்று விளங்கும் ஆலயம் வண்ணை வீரமாகாளியம்பாளின் ஆலயம். மக்களை வாழ்வாங்கு வாழ வைக்கும் தெய்வீக நிலையங்களே ஆலயங்களாகும். இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பாள் சக்தியும் கருணையும் மிக்கவள். அருள்மாரி பொழிந்து குளிர வைப்பவள். அல்லல்கள் அகற்றி ஆறுதல் அளிக்கும் கருணைத் தெய்வம். அருள் வளமும் பொருள் வளமும் ஒரு சேரப்பெற்ற அன்பர்கள் பலரை தன்னகத்தே கொண்ட திருக்கோயில் இதுவாகும். காலந்தோறும் அம்பாளின் ஆலயத்தை கலைக்கோயிலாகக் காணும் சீரிய எண்ணமிக்க திருப்பணிச் செல்வர்கள் வாழும் புனித திருப்தி இதுவாகும்.

மலர்ந்துள்ள சர்வதாரி வருஷத்திலே வருடாந்த மகோற்சவம் இன்று (25.05.2008) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் மகோற்சவங்கள் நடைபெறவுள்ளது. மகோற்சவ காலங்களில் தரிசிக்கும் அடியார்களும் உலகமெங்கும் வாழும் அம்பாளின் பக்தர்களும் மண்ணில் எல்லோரும் நல்ல வண்ணம் வாழவும் நாட்டில் சாந்தி சமாதானம் அமைதி வாழ்வு திரும்பவும் அம்பாளைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

*"சிவார்ச்சாரிய இளவரசு",*
**சிவஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்**
மகோற்சவ பிரதம குரு வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்.

## ஆலய பிரதமகுருக்களின் ஆசியுரை



அகில புவன மாதாவாகிய அன்னை வீரமாகாளியின் சர்வதாரி வருஷ மகோற்சவம் நாளை ஆரம்பமாகின்றது. இவ்வேளையில் அம்பாளைத் தரிசிக்கும் அடியார்களுக்கும் உலகெங்கும் வாழுகின்ற அம்பாளின் பக்தர்களுக்கு மலர்ந்துள்ள சர்வதாரியில் சர்வ விக்கினங்களையும் நீக்கி நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்க எல்லாம் வல்ல வீரமாகாளி அம்பாளை பிரார்த்தித்து அருள்ஆசி கூறுகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்".

**சிவஸ்ரீ நா.சிவதர்ஷக்குருக்கள்,**
பிரதம குரு வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்.

(சி/552944)

யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஊழியர்
திரு. வாரித்தம்பி நவரத்தினம் அவர்களின்

## சேவை நலன் பாராட்டு

24.05.2008



பதின்னான்கு ஆண்டுகள்
பண்புடனே பணியாற்றி
ஐந்தாண்டுகள் கண்ணை
இமை காப்பது போல்
எம் கல்லூரியைக் காத்து
நின்ற காவலரே!
வாழ்க பல்லாண்டு!
பல்லாண்டு!

**சேவையாளர் சங்கம்,**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**
(74407)

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

**ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்**

*Diploma in Hardware Engineering*
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

*Diploma in Video Editing*
முன்னணி Video Mixing Software களுடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

*Diploma in Graphic Designing*
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

*Diploma in Quick Books*
பிரபல கணனிக்கணக்கியல் மென்பொருள்
Course Fee : 2000/=

வகுப்புக்கள் ஆரம்பம் : 26/05/2008 09.00AM

**தேவை**

யாழ்.பல்கலைக் கழகத்திற்கு அருகில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு கணனி அறிவுடைய பெண் பிள்ளைகள் தேவை (23.05 முதல் 30.05 வரை தொடர்பு கொள்ளவும்.
**NEW GOLDEN STAR**
Sir Pon Ramanathan Road
Thirunelvely, Jaffna
T.P.0774011254 (74393)

**வீடு விற்பனைக்கு**

*இல. 50, பலாலி வீதி, உரும்பிராயில்*
(உரும்பிராய் சந்தியில் இருந்து புன்னாலைக்கட்டுவன் பக்கமாக 150 யார் தொலைவில்) சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: **நிஷாடினி**
இல.50,பலாலி வீதி, உரும்பிராய், (74346)
தொ.பே.0774 611367

**தேவை**

யாழ்.நகரிலுள்ள பிரபல விநியோக நிறுவனத்திற்கு விற்பனை எழுதுவினைஞர் தேவை. ஆங்கில, கணித பாடங்களில் திறமைச் சித்தியுடன் G.C.E O/L or A/L சித்தியடைந்த 18 - 25 வயதிற்கு உட்பட்ட பெண்கள் தங்கள் சுயவிபரமடங்கிய விண்ணப்பத்தை 28.05.2008 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.
(74389) **மே/பா 3099 உதயன்**
*யாழ்ப்பாணம்.*

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 24.05.2008 விநியோகிக்கப்படும். பதிவு களை மேற்கொள்ளவும்.
**ராஜீவ் -**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை
**திருமகள் களஞ்சியம் -**
சிவலிங்கப் புளியடி
**மதுரா -**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
**சிற்றி பாம் றேடேர்ஸ் -**
கல்வியங்காடு
P.... - தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி (74385)

## வடமராட்சி கிழக்கிற்கென தனியான பிரதேச சபை அமைத்துத் தரக் கோரிக்கை

வடமராட்சி,மே.24

வடமராட்சி பிரதேசத்திற்கென தனியான பிரதேச சபை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என யாழ்.அரசாங்க அதிபர் கே. கணேஷிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் உதவி அரசாங்க அதிபர் மா. சிறிஸ்கந்தகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டு , கோரிக்கையாக யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கிற்கென தனியான பிரதேச சபை இல்லை. இப் பிரதேசத்திற்கு தனியான பிரதேச சபை ஒன்று அவசியம்.

ஆதலால் வடமராட்சிப் பிரதேசத்திற்கெனத் தனியான பிரதேச சபை ஒன்றை உருவாக்கித் தருமாறு யாழ். அரச அதிபருக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அனுப்பி வைத்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளார். (202-236)

## 8ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

மலர்வு 06 ★ 11 ★ 1957



உதிர்வு 24 ★ 05 ★ 2000

**செல்வி சசிகலா சுப்பிரமணியம்**
*(முன்னாள் சிறாப்பர், பிரதேச செயலகம்- சாவகச்சேரி)*
*திதி: அபரபக்க சஷ்டி (26.05.2008)*

ஆறாத்துயரில் விட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புச் செல்வமே!
ஆண்டுகள் எட்டு ஆனாலும் ஆறாது எங்கள் துயர்
ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிளுவாணை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (74395)
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு உற்சவ காலத்தில் பக்தர்களின் போக்குவரத்துக் கெடுபிடிகள் தளர்த்தப்படும்

நல்லூர்,மே24

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவ காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து நயினாதீவு செல்லும் பக்தர்களின் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் எனத் தீவுப்பகுதி கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆலய உற்சவ கால ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் அண்மையில் வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தீவுப்பகுதி கடற்படை அதிகாரி, ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஆலய நிர்வாக உறுப்பினர்கள் உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

நயினாதீவு - குறிகாட்டுவான் இறங்குதுறைகளில் பொதுமக்களுக்கு உதவும் பொருட்டு கடற்படையினர் ஈடுபடுவர் என்றும் கடற்படை அதிகாரியால் அங்கு தெரிவிக்கப்பட்டது.

கடற்பயணத்தின்போது உயிர் பாதுகாப்பு அங்கிகளை அணிந்துகொள்ளுதல், போக்குவரத்து வசதிகள் போன்றவை குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன. (202-111)

# சரசாலை வடக்கில் மலகூடக் கழிவுகளைக் கொட்டுவதைக் கண்டித்து விரைவில் மறியல்

யாழ்ப்பாணம்,மே24

சரசாலை வடக்குப் பகுதியில் வாகனத்தில் கொண்டுவரப்படும் மலகூடக் கழிவுகள் கொட்டப்படுவதைக் கண்டித்து அப்பகுதி மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டுவரப்படும் மலகூடக் கழிவுகள் மக்கள் குடியிருப்பினை அண்டிய பகுதியில் வீதியோரத்தில் கொட்டப்படுவதாகவும், இதனால் அப்பகுதியில் தேங்கி நிற்கும் கழிவுகளின் துர்நாற்றத்தினால் குடியிருப்பாளர்களும், சரசாலை, பருத்தித்துறை வீதியில் செல்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

அப்பகுதியில் மலக்கழிவுகள் கொட்டப்படுவதை தடுக்கச் செல்வோரை யாழ். செயலகத்திற்கு விசாரணைக்கு வர நேரிடும் என அச்சுறுத்துவதாகவும் அண்மையில் வீசும் காற்றினால் குடியிருப்புகளில் இருக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் விரைவில் மறியல் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினருக்கு கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு முறைப்பாடுகள் செய்தும் இதுவரை பயன் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

(202-207)

# கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிகள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே24

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிநெறிகள் நடத்தப்பட வுள்ளன.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய இப்பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கோப்பாய், வேலணை, காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

சமூக மட்ட நிறுவனங்களின் தலைமைத்துவப் பண்புகள், நுண்கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள், கிராம மட்ட தகவல்களை, தரவுகளைச் சேகரித்தலும் அதனைச் சேமித்து வைத்திருப்பதன் மூலம் அபிவிருத்திக்குப் பயன்படுத்தலும், அனர்த்த முகாமைத்துவம் அல்லது முரண்பாட்டு முகாமைத்துவம், பால் நிலையும் அபிவிருத்தியும், சங்கங்களின் செயற்பாடுகள், சிறு கருத்திட்டங்களைத் தயாரித்தலும் அதனை நடைமுறைப்படுத்தலும்,

அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து புனர்வாழ்வு நோக்கத்திற்கு நிதியைப் பெறுதலும் அதனைத் தகுந்த முறையில் பயன்படுத்தலுக்குமான வழிமுறைகளும், சமூக வலுவூட்டல் மூலம் தங்கி வாழும் நிலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள், அணி சேர்க்கையும் குழு இயக்கமும், கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் உட்கட்டமைப்பும் செயற்பாடும், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் செயற்பாடுகள், கிராம அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள், தொற்றுநோய்களும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளும்,

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கணக்குப் புத்தகங்களைப் பராமரிப்பதன் அவசியம், கணக்கு வைப்பு முறைகள், நுண்நிதி, சிறுநிதி முக்கியத்துவம், சுயதொழில் கடன் திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குரிய நுட்பங்கள் ஆகிய விடயங்களை உள்ளடக்கிப் பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளன. (202-111)

# சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு சிறப்புச் சேவைகளுக்காக 25 விருதுகள்

யாழ்ப்பாணம்,மே24

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் 2007/2008 நடப்பு வருடத்தில் மேற்கொண்ட சிறப்பு சேவைகளுக்காக பிராந்திய மட்டத்தில் 23 விருதுகளையும் மாவட்ட மட்டத்தில் இரண்டு சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்டத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட ஆளுநர் லயன் செ.இராகவனால் இவ்விருதுகளும், சான்றிதழ்களும் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

பிராந்தியம் எட்டில் (8) சிறந்த தலைவர், சிறந்த செயலாளர், சிறந்த பொருளாளர், சிறந்த நிர்வாகம், சிறந்த அபிவிருத்தித் திட்டங்கள், சிறந்த நூல், பதிப்பாசிரியர், சிறந்த மாவட்ட பிராந்திய வலயத் தலைவர்கள் ஆகியவற்றுக்கும் -

இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களில் இடம்பெயர்ந்தோருக்கான உதவி, சூழல் பாதுகாப்பு, சமாதான சுவரொட்டிகள், சர்வதேச புரிந்துணர்வு, விளையாட்டு, லயன்ஸ் சீமாட்டிகளின் பங்களிப்பு, லியோ நிகழ்ச்சித்திட்டங்கள், மலேரியா தடுப்பு, தலைமைத்துவம், தினவரவு, வறுமையாளர்களுக்கு உதவி ஆகியவற்றுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் 306பி1 மாவட்ட மட்டத்தில் இரு சான்றிதழ்களும் கிடைத்ததாக கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார். (202-207)



புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இணுவிலில் அமைந்துள்ள மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையின் நீடித்த கருமபீடத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ்.கென்றி மங்கள விளக்கேற்றுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இணுவில் கிராமசேவை உத்தியோகத்தர் கே.இரவீந்திரன் அருகில் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

கிளைமுகாமையாளர் கே.கந்தசாமி புதுவருட சேமிப்புச் சான்றிதழ் பெற்ற வாடிக்கையாளர் கே.ஜெனந்தனுக்கு பரிசாக மணிக்கூடு வழங்குவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### கூட்டம்

யாழ்ப்பாணம்,மே24

மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் சுயதொழில் ஒய்வூதிய விண்ணப்பப் படிவம் வழங்கப்படும் என சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (202-207)

### வழிகாட்டிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே24

அரச சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்பு IIIஇற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் வழிகாட்டிக் கருத்தரங்கு எதிர்வரும் 27ஆம் திகதி தொடக்கம் 4 தினங்களுக்கு பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபை ஊழியர்கள் மட்டுமன்றி ஏனைய திணைக்களங்களில் கடமையாற்றும் கனிஷ்ட ஊழியர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றலாம். (202)

### கோப்பாய் கோட்ட மாணவர்களில் மூக்குக்கண்ணாடி தேவையானோருக்கு அவற்றை வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே24

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களில் மூக்குக்கண்ணாடி பாவிக்கவேண்டிய மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூக்குக்கண்ணாடிகள் பாவிக்கவேண்டிய மாணவர்களின் விவரங்கள் கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி மூலமாக கோப்பாய் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தினரால் திரட்டப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக முழுமையான விவரம் கிடைக்கப் பெற்றதும் சமூகசேவைகள் அமைச்சுடன் தொடர்புகொண்டு, அமைச்சின் மூலமாக மூக்குக்கண்ணாடிகளைப் பெற்று தேவையான மாணவர்களுக்கு அவை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-236)

# கல்வியை இடைநிறுத்தி பிள்ளைகளை தொழிலுக்கனுப்பும் நிலையில் பெற்றோர்

## விலைவாசி ஏற்றத்தின் விளைவு பற்றி நீதியமைச்சின் செயலரிடம் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,மே 24

நாணயமாற்று வீதத்தில் ஏற்பட்ட தளம்பலால் தற்பொழுது தென்பகுதியிலும் உணவுப் பண்டங்களின் விலை அதிகரித்துள்ளது. கப்பல் கூலியும் அதிகரித்துள்ளது. குடாநாட்டில் உள்ள குடும்பத் தலைவர்கள் உணவுத் தேவைக்கேற்ப வருமானத்தைப் பெறமுடியாதவர்களாக உள்ளனர். இதனால் பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தி அவர்களை தொழில்களில் ஈடுபடுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. குடும்பச் செலவை சமாளிக்க அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை.

இவ்வாறு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் கவலையுடன் குறிப்பிட்டார்.

கடந்த புதன்கிழமை நீதி அமைச்சின் செயலாளர் சுகத கே.கமலத் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்தார். அதன்போது யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவரை வரவேற்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அதிபர் ந.யோகராஜன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

**கல்லூரி மாணவர்களுக்கு அரிசி வழங்க வேண்டும்**

பிள்ளைகளின் கல்வி இடைநிறுத்தப்படுவதால் எமது தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் வருகையும் பாதிக்கப்படுகின்றது. எனவே தொழில்நுட்பக் கல்லூரி மாணவரின் வருகை தடைப்படாதிருக்க அவர்களுக்கு வாராந்தம் 2 கிலோ அரிசியாவது இலவசமாக வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தரைப்பாதை திறக்கும்வரை மட்டுமே இந்த உதவி தேவை.

செயலாளர் அவர்கள் எமது மாணவர்களுக்கு உதவுவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இதை ஒரு மனிதாபிமான பிரச்சினையாக கருத்தில்கொண்டு நடவடிக்கை மேற்கொள்வார் என்று நம்புகின்றேன்

**சரணடைந்தவர்களுக்கு தொழிற்பயிற்சி**

சமகால அரசியல் சூழ்நிலை காரண மாக எமது பிரதேசத்தில் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டு மனித உரிமைக் குழுவில் தமது பாதுகாப்புக்காக தஞ்சம் கோரி சரணடைந்தவர்களின் வாழ்க்கைப் பிரச்சினையை மனிதாபிமான கண்ணோட்டத்தில் புரிந்துகொண்டு அவர்களுக்கு உதவவேண்டுமென்ற நோக்கம் கொண்டவர் எமது நீதி அமைச்சின் செயலர் சுகத கே.கமலத்.

இங்குள்ள நிலைமைகளை நேரடியாக பார்வையிடுவதுடன் மதிப்பீட்டை உயர் பீடத்திற்கு சமர்ப்பிப்பதற்காகவே அவரது வருகை அமைந்துள்ளது. அவரையும் அவர் சார்ந்த குழுவினரையும் வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஏற்கனவே சரணடைந்தவர்களில் ஒரு தொகுதியினர் [illegible] புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியுள்ளனர். அவர்கள் அங்கு தங்கி இருக்கும் காலம் வீணாகக் கூடாதென்ற எண்ணக்கருவின் அடிப்படையில் இந்தக் காலப்பகுதியைப் பலனுள்ள தாக்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு அவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்க நடவடிக்கை எடுத்தவர் நீதி அமைச்சர் செயலாளரே.

எந்தப் பாவமும் அறியாத சிறுகுழந்தைகள், தாய்மாருடன் சரணடைந்துள்ளனர். தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்தில் சூழ்நிலைக் கைதிகளாகவே இவர்கள் புனர்வாழ்வு முகாமில் தங்கியுள்ளனர். இவர்களுள் 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களுள் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் உள்ளனர். இவர்களின் மனநிலை பாதிப்புறும் என்பதை தெரிந்துகொண்டு அவர்களது மனநிலை பதிப்புறாவண்ணம் இருப்பதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைப்பதற்காக அது சம்பந்தமாக கடந்த வாரம் அமைச்சு செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார்.- என்றார். (202-302)

### நூல் வெளியீட்டு விழா

கலையார்வன் கு.இராயப்புவின் ஆண்மீகத்தில் குருநகர் மக்கள் என்னும் நூலில் வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை பி.ப. 4.15 மணிக்கு குருநகர் புனித கார்மேல் மாதா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெயோ கல்சரல் கவுன்சிலின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஐ.நா. அபிவிருத்தித் திட்ட கையளிப்பு நிகழ்வுகளின் போது...

குடாநாட்டில் பூர்த்தி செய்யப்பட்ட ஐ.நா.அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிடுவதற்கும் அவற்றை உரியவர்களிடம் கையளிக்கவும் என நிறுவனத்தின் பிரதிநிதிகள் குடாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தனர்.

திட்டத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி டக்ளஸ்கே, பிரதி வதிவிடப் பிரதிநிதி வென்கிட் மீசிங், திட்ட உதவியாளர் கேகாவா ஜமகிவா ஆகியோர் குடாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தனர்.

அவர்கள் பங்குபற்றிய நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள்: லக்ஸ்மன்)



வேலணை செட்டிப்புலம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட விடுகளை அரச அதிபரும் யு.எல். டி.பி. பிரதிநிதியும் திறந்து வைக்கும்போது....



விருந்தினர்கள் வரவேற்பின்போது....



யு.என்.டி.பி பிரதிநிதி பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைக்கின்றார்





யாழ்.செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் என்.டி.பி பிரதிநிதி திட்டத்திற்கான சான்றிதழைக் கையளிக்கின்றார்....



யு.என்.டி.பி பிரதிநிதி திட்டத்திற்கான சான்றிதழைக் கையளிக்கின்றார்....



நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர்

# வறுமையில் வாழும் ஒரு குடும்பம் தொழில் பெற்று வளம்பெற அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவவேண்டும்

## கற்கோவளத்தில் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரி கருத்து

வடமராட்சி,மே24

ஒரு வீடு மட்டும் இருந்தால் போதாது. வருமானம் பெறும் தொழிலும் ஒரு குடும்பத்திற்கு அவசியம். தொழில் தேடுவது கடினமானதுதான். இதற்கு அரசு, அரச சார்பற்ற நிறுவனம் உதவ வேண்டும். அத்துடன் மக்களின் பங்களிப்பும் அவசியம்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி டக்ளஸ்கே தெரிவித்தார்.

பருத்தித்துறை கற்கோவளம் புனித நகரில் ஐக்கிய நாடு கள் அபிவிருத்தித் திட்டத்தினால் ஆழிப் பேரலை அனர்த்த புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 40 வீடுகள் கைய·ளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

நாகர் கோவில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. சிவசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் டக்ளஸ்கே தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

இந்நிகழ்வு நேரத்தை ஒருமுக்கியமான நேரமாக உணர்கின்றோம். யு.என்.டி.யின் தலைமையகமான நியூயோர்க்கிலிருந்தும் கொழும்பிலிருந்தும் வேலைகளைப் பார்த்துள்ள நாம் அங்கிருந்து கொண்டு பலாபலன்களை உணர்ந்து கொள்வ தில்லை. இங்கு நேரடியாகப் பார்க்கும் போதுதான் எமது வேலையின் பலாபலன்களை உணர்கின்றோம். உங்கள் முகங்களில் வீசும் ஒளி எமக்கு புத்துணர்வைத் தருகின்றது. நாம் அரசாங்கம், அரசாங்க அதிபர் ஏனைய அமைப்புகளின் உதவிகள் ஒத்தாசைகளினால்தான் இந்நிகழ்ச்சியில் வெற்றி அடைந்துள்ளோம்.

இவ்வீடுகளைக்கட்டி முடிக்க அதிக நாள் எடுத்த போதிலும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. இது ஒரு ஆரம்பமாகும். வீடுகளைக் கட்டினாலும் அவற்றைப் பராமரிப்பது கடினமாக இருக்கும். வீடு மட்டும் இருந்து விட்டாலும் தொழில் தேடு வதும் கடினமாகத்தான் இருக்கும். அதனால் அரச, அரசசார்பற்ற நிறுவனம் ஆகியவற்றுடன் மக்களாகிய நீங்களும் பங்காளிகளாக செயற்பட்டால் நல்லதாக அமை யும்.

யாழ்.அரச அதிபர் எடுத்த தனிப்பட்ட முயற்சியினால்தான் இத்திட்டம் நிறைவேறியுள்ளது. இந் சந்தர்ப்பத்தில் அவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார்.

**அரச அதிபர்**

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் உரையாற்றுகையில் தெரிவித்தாதாவது:

பெரும் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்த எமது மக்களுக்கு வீடுகளை இன்று கையளிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். அதே நேரம் இவ் வீடுகளை அமைக்க உதவிய அனைத்துத் தரப்பினருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணி செய்வதே அதிகாரிகளான எமது பொறுப்பாகும். அப் பொறுப்புக் களிலிருந்து ஒரு போதும் தவறி விடக்கூடாது. மிகச் சிறிதாகத்தான் இவ் உதவிகளைச் செய்துள்ளோம். கடந்த 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டம் இப்பொழுதுதான் நிறைவேறுகிறது. மக்களாகிய நீங்கள் மூன்று வருடங்களாக பொறுமையாக இருந்துள்ளீர்கள். வீட்டில் இருந்துதான் நல்ல எதிர்காலம் உருவாக வேண்டும். தொழில் வளங்களைப் பெருக்குவதுடன் கஷ்டத்தின் மத்தியிலும் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுவது முக்கியமாகும். கல்வி மூலம் தான் சிறந்த எதிர்காலத்தைப்பெற்றுக் கொள்ள முடியும்.

கடந்த 2005 ஆம் ஆண்டு இக்கிராமம் பொலிவிழந்து காணப்பட்டது. மக்களும் மிகுந்த வாட்டத்துடன் காணப்பட்டனர். இப்போது மூன்று வருடங்களின் பின்னர் இக் கிராமம் செழிப்பாக காணப்படுகிறது. மக்கள் சந்தோஷமாக இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. நீண்ட காலத் திட்டமாக இக்கிராமத்தை அபிரிவிருத்தி செய்யவுள்ளோம் என்றார்.

விழா ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டக்ளஸ்கே, திட்ட அதிகாரி கைக்கோறு யமஜிவ, சிரேஷ்ட செயற்றிட்ட முகாமையாளர் ஆரியா கற டஜி, யாழ். அரச அதிபர் கே. கணேஷ், பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் புனித நகர் நுழைவாயிலான மின்மாற்றுச் சந்தியில் வைத்து மேள வாத்தியத்துடன் ஊர்வலமாக பொதுநோக்கு மண்டபம்வரை அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு வீட்டுத் திட்டத்துக்கான பொதுவான பெயர்ப் பலகையின் இரு பக்கங்களையும் டக்ளஸ்கே , யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர். முதலாவது வீட்டை டக்ளஸ்கேயும், யாழ்.அரசஅதிபரும் இணைந்தும் இரண்டாவது வீட்டை பருத்தித்துறை பிரதேச செயலரும் ஆரியா கறடஜியும் இணைந்தும் மூன்றாவது வீட்டை கைக்கோறு யமஜியவும் யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் கே. தர்மலிங்கம் இணைந்து திறந்து வைத்தனர்.

(202-236-218)

# பிள்ளையான் குழுவின் ஆயுதங்களைக் களைய இன்னும் சற்று கால அவகாசம் தேவையாம்!

## அரசு நேற்றுமுன்தினம் அறிவிப்பு

கொழும்பு, மே 24

பிள்ளையான் குழுவின் ஆயுதங்க ளைக் களைய அரசு தயாராக இருப்பதாகவும் ஆனால், அதற்கு சிறிய கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அரசு நேற்றுமுன்தினம் அறிவித்தது.

வெளிவிவகார அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவே இதைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு மக்களைப் புலிகளின் பிடியில் இருந்து மீட்ட அரசு, அங்கு ஜனநாயகத்தை முழுமையாக நிலைநாட்டும் நோக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தியது.

நாம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகியமை பேச்சு மூலமான அரசியல் தீர்வை அடைவதற்கான எமது பயணத்திற்குத் தடையாக இருக்காது என்பதை இச்சந்தர்ப்பத்தில் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

இன்றைய கிழக்குமாகாணத் தேர்தல் முடிவு நீண்டகாலமாகத் துன்பப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் - பாரிய அபிவிருத்திகளை முன்னெடுக்கும் - நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக அமைகின்றது.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட பிள்ளையான் குழு இத்தேர்தல் மூலம் ஜனநாயக நீரோட்டத்திற்குத் திரும்ப வழி சமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அதில் வெற்றிபெற்று பிள்ளையானே முதலமைச்சராகவும் தெரிவாகியுள்ளார். அதேவேளை தேர்தலுக்கு முன்பிருந்தே பிள்ளையான் குழுவின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்று கோரிக்கை விடப்படுகின்றது.

பிள்ளையான் குழுவின் ஆயுதங்களைக் களைய அரசு தயாராகவே உள்ளது. ஆனால், அதற்கான நேரம் இதுவல்ல. அதற்கு சற்றுக் கால அவகாசம் தேவைப்படுகிறது. - என்றார்.

(சி)

# வடமராட்சி மாணவர்கள் பாடசாலை செல்வதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும்

## பிரதேச உதவி அரச அதிபர் அறிவுறுத்து

வடமராட்சி, மே24

வடமராட்சி கிழக்கில் மாணவர்கள் பாடசாலைகளுக்கு ஒழுங்காகச் செல்கிறார்களா என்பதை அவ்வவ் பகுதி கிராம உத்தியோகத்தர்களும் பிரதேச சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்களும் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டுமென வடமராட்சி கிழக்கின் இப்பிரதேச உதவி அரசாங்க அதிபர் மா.சிறிஸ்கந்தகுமார் கேட்டுள்ளார்.

ஒவ்வொரு குடும்பத்திலும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாதிருந்தால் அக் குடும்பத்திற்கான நிவாரணம் நிறுத்தப்படும். குடும்பத்தினர் எவரும் வருமானத்திற்காகப் பிள்ளைகளை தொழிலுக்கு அனுப்பக் கூடாது என்றும் உதவி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

(202-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## அடிவாங்கும் ஊடக சுதந்திரம்

உலகில் மனித உரிமைகள் பேணப்படுகின்ற நிலைமை குறித்து ஆராய்கின்ற உயர் சபையான ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு உறுப்புரிமை பெறும் தகுதியோ, அருகதையோ அற்ற நாடு இலங்கை என்று கருதி, இலங்கையை உலக தேசங்கள் நிராகரித்து 24 மணி நேரத்துக்குள் அந்தத் தீர்மானம் சரியானதே என்பதை நிரூபிக்கும் மற்றொரு சம்பவம் இந்த நாட்டின் தலைநகரில் - கொழும்பில் - நடந்தேறியிருக்கின்றது.

கொழும்பின் பிரபல ஆங்கில வார இதழ் ஒன்றின் பிரதி ஆசிரியரும் மூத்த பத்திரிகையாளர்களில் ஒரு வருமான கீத் நொயார், தெஹிவளையில் உள்ள தமது வீட்டு வாசலில் வைத்துப் பலவந்தமாகக் கடத்திச் செல் லப்பட்டிருக்கின்றார்.

உலக தேசங்களின் தீர்ப்பு புதனன்று இரவு வெளியானது. நொயார் அடுத்த நாள் வியாழன் இரவு கடத்தப்பட்டிருக்கின்றார்.

கடுமையாகத் தாக்கப்பட்டு, நையப்புடைக்கப்பட்ட பின்னர் நேற்று அதிகாலை அவர் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்.

இலங்கையில் வழமையாக - அண்மைக்காலத்தில் - நடைபெற்றுவருகின்றமைபோல அவர் கடத்தப்பட்ட பின்னர் காணாமற்போகச் செய்யப்படாமல் அல்லது படுகொலை செய்யப்படாமல் தாக்குதலோடாவது - விடுவிக்கப்பட்டமை ஆறுதல் தரும் செய்தி.

ஆனாலும் இப்படித் தலைநகரில் பிரபல பத்திரிகையாளர் ஒருவர் பகிரங்கமாகக் கடத்தப்பட்டு, கடுமையாகத் தாக்கப்பட்ட விவகாரமும், வழமைபோல பொலிஸ் முறைப்பாட்டுப் பதிவுடன் கிணற்றில் போட்ட கல் ஆக அமுங்கிவிடும் என்பது திண்ணம்.

இந்தக் கொடூரத்துக்குக் காரணமானவர்கள் கைது செய்யப்படுகின்றமையோ, அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுகின்றமையோ வழமைபோல இப்போதும் நடக்கப்போவதில்லை.

குற்றமிழைத்த சீருடைத்தரப்பினருக்கு சட்டத்தின் தண்டனைகளில் இருந்து விலக்களிக்கும் விசேட சலுகை இந்த நாட்டில் நடைமுறையில் இருக்கும்வரை -

இதுபோன்று அரசுத் தரப்பு சார்ந்த சக்திகளின் பின்னணியில் மேற்கொள்ளப்படும் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரித்து, நியாயமான புலனாய்வு நடவடிக்கைகளை முடுக்கி விட்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற நீதி மீதான பற்றுறுதியும் அரசியல் திடசங்கற்பமும் ஆட்சித் தலைமைக்கு ஏற்படாத வரை -

இத்தகைய கொடூரங்கள் தொடர்பான சூத்திரதாரிகள் சட்டத்தின் பிடியை இந்த நாட்டில் சந்திக்கவே மாட்டார்கள் என்பது திண்ணம். இத்தகைய அராஜகங்களும் தொடர்கதையாகவே தொடரும்.

ஊடகங்கள் மீதான அரசுத் தரப்பின் மற்றொரு கொடூரத்தின் வரிசையில் நொயார் மீதான தாக்குதல் சேர்க்கப்படும். ஊடகவியலாளர்களும், ஊடக சுதந்திரத்தின் மீதான ஆர்வலர்களும் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள்; ஊடகங்களில் கண்டனக் கணைகளை முன்வைப்பார்கள். சர்வதேச, தேசிய ரீதியில் காட்டமான அறிக்கைகள் வெளியாகும். அத்துடன் விடயம் அடங்கிப் போய்விட வேண்டியதுதான்.

அதற்கிடையில் ஊடகம் மீதான அழுத்தம் இன்னொரு புறத்தில் வெடிக்கும். கண்டனங்களும், ஆர்ப்பாட்டங்களும், அறிக்கைகளும் மீண்டும் அந்தச் சம்பவத்தை ஒட்டியும் வெளியாகும்.

ஊடக சுதந்திரம் மீதான இந்த அரசின் கெடுபிடி அராஜகம் இப்படி ஒரு தொடர்கதையாகத் தொடர வேண்டியதுதான்.

இந்த அரசுத் தலைமையின் அராஜகம் தொடரும் வரை இத்தகைய - ஊடக சுதந்திரம் மீதான - வன்முறைக் கொடூரங்களும் தொடர்ந்து கொண் டுதான் இருக்கப் போகின்றன.

ஆனாலும், இவ்வாறு சட்ட முரணான அராஜகங்களைக் கட்டவிழ்த்து விட்டபடி, ஊடக சுதந்திரம் போன்ற அடிப்படை மனித உரிமைகளைமீறுவதற்கு இடம ளிக்கும் ஓர் ஆட்சித் தரப்பாரை உலக சமுதாயம் பொறுக்காது என்பது தெளிவு.

அதன் முதல் கட்டப் பிரதிபலிப்பையே கடந்த புதனன்று நியூயோர்க்கில் ஐ.நா. மன்றத்தில் நடந்த வாக்களிப்பின்போது, இலங்கையை நிராகரித்து உலக தேசங்கள் வெளிப்படுத்தின.

அரச ஊடகம் ஒன்றுக்குள் அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் தாமே குண்டர் குழுவுடன் புகுந்து தாக்குதல் நடத்தும் அளவுக்கு -

அந்தத் தாக்குதல் அட்டகாசம் தொடர்பாக அரசுத் தலைமை சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ மறுத்து அவரைத் தட்டிக் கொடுக்கும் அளவுக்கு -

அமைச்சரின் அட்டகாசத்தை ஆட்சேபித்து, எதிர்த்த சக பத்திரிகையாளர்களைத் தேடித் தேடித் தாக்குதலுக்கு உள்ளாகும் நிலைக்கு -

ஊடக சுதந்திரம் இலங்கையில் முன்னேறியிருக்கிறது

ஊடக சுதந்திரத்தை ஆட்சி அதிகார இருள் பற்றிப் பிடித்துக் கவ்வி வருவது துலாம்பர மாகியுள் ளது. அதில் ஒரு கட்டமே நொயார் மீதான தாக்குதலும்.

## நாள் முழுவதும் மணல்திட்டில் தத்தளித்த இலங்கை அகதிகள் கடற்படையால் மீட்பு

மண்டபம், மே 24

தனுஷ்கோடி கடல் இரண்டாம் மணல் திட்டில் தத்தளித்த 14 அகதிகளை இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் மீட்டு, மண்டபம் கொண்டு வந்தனர் எனத் தமிழக நாளேடுகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக மேலும் வெளியான தகவல்கள் வருமாறு:-

இலங்கை மன்னார், வவுனியா பகுதியிலிருந்து ஐந்து குடும்பத்தைச் சேர்ந்த 14 அகதிகள் தமிழகம் வருவதற்கு 20ஆம் திகதி காலை படகில் புறப்பட்டனர். கடலில் இலங்கை இராணுவத்தினர் ரோந்து சென்றதால் அன்று மதியம் 12 மணிக்கு படகோட்டிகள் இலங்கை மணல் திட்டில் இறங்கி விட்டுச்சென்றுள்ளனர்.

பின்னர் இவர்கள் மற்றொரு இலங்கைப் படகில் குடும்பத்திற்கு தலா ரூபா ஐந்தாயிரம் கொடுத்து புறப்பட்டனர். ராமேஸ்வரம் கடலில் இந்தியக் கடற்படையினரின் ரோந்து இருந்ததால் மே 21 பிற்பகல் 3 மணிக்கு படகோட்டிகள் தனுஷ்கோடி கடல் இரண்டாம் மணல் திட்டில் இறக்கிவிட்டுள்ளனர். அங்கு தத்தளித்த அகதிகளை இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு மீட்டு மண்டபம் அழைத்து வந்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் விசாரணை செய்து மண்டபம் முகாம் அனுப்பி வைத்தனர்.

## விளையாட்டு விழா

சுழிபுரம்,மே24

காலையடி ஸ்ரீமுருகன் முன்பள்ளியும் பனிப்புலம் அம்பாள் முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பனிப்புலம் அம்மன் கோயில் வீதியில் நடைபெறவுள்ளது.

அம்பாள் சனசமூக நிலையத் தலை வர் தலைமையில் போட்டிகள் நடை பெறும். பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சி.மா.குமாரசுவாமி கலந்துகொள்வார்.

(202-28)

## அச்சுறுத்தலால் சரணடைந்தவர்களின் பயன்பாட்டுக்கு நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மே24

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரணடைந்தவர்கள் வாசிப்பதற்கென வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் 13 ஆயிரம் ரூபா பெறுமதியான 89 நூல்களை வழங்கியுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளதாகச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

அறிவியல், சமயம், தத்துவம், பொது அறிவு தொடர்பான நூல்களே அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை-

நூலக விழிப்புணர்வு நிறுவனத்திற்கும் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களையும் இச் சங்கம் வழங்கியுள்ளது.

(202-120)

## ஜசீதரன் வழக்குப் போடுவதைத் தடுக்க மனைவி பணயக் கைதியாகக் காவலில்!

### சுதந்திர ஊடக இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,மே24

'அவுட்ரீச்' இணையத்தள உரிமையாளரும் செய்தியாளருமான ஜசீதரன் தனக்கு இழைக்கப்பட்ட துன்புறுத்தல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தடுப்பதற்காகப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அவரது மனைவியைப் பணயக் கைதியாகத் தடுத்து வைத்துள்ளனர் எனச் சுதந்திர ஊடக இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜசீதரனின் மனைவியை மருத்துவர்கள் சந்திப்பதற்கு அதிகாரிகள் அனுமதியளிக்க மறுத்து வருவதாகத் தெரிவித்துள்ள சுதந்திர ஊடக இயக்கம் மேலும் இதுபற்றி வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

'அவுட்ரீச்' இணையத்தளத்தைச் சேர்ந்த ஜே.எஸ். திஸநாயகமும், ஜசீதரனும் அவரது மனைவியும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு ஆறுவாரங்களாகின்றமையை சுதந்திர ஊடக இயக்கம் கவலையுடனும் விசனத்துடனும் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

இவர்கள் மூவருக்கு எதிராகவும் எந்த நீதிமன்றத்திலும் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்படவில்லை.

திஸநாயகம் கைதுசெய்யப்பட்ட வேளை தடுப்புக்காவல் உத்தரவு அவருக்குக் கையளிக்கப்படவில்லை. அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் இது வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

மேலும் ஜனாதிபதியின் உத்தரவின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளபடி உறவினர்களிடமும் கைதுக்கான ஆவணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

திஸநாயகம் காற்றோட்டமில்லாத அறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார். கடும் மன அழுத்தம் காரணமாக அவரது கண்பார்வை பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜசீதரன் கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார் எனவும் அவருக்கு உறங்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

ஜசீதரன் தனக்கு இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தடுப்பதற்காகவே அவரது மனைவியைப் பணயக் கைதியாகத் தடுத்து வைத்துள்ளனர் - என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது (சி)

## ஒன்றுகூடல்கள்

அச்சுவேலி,மே24

அச்சுவேலி மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தின் "ஒன்றுகூடலும் மதியபோசன விருந்தும்" நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தின் தலைவர் செல்வன் கே.நாஸ்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் திருமதி பிரதீபா கபிலன் கலந்து கொள்ளவுள்ளார்.

(202-11)

* * *

யாழ்ப்பாணம்,மே24

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை உயர்தர மாணவர் மன்றத் தலைவர் க.பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி கே.இராதையன் இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் ஆசியுரை நிகழ்த்துவார்.

(202)

## காணாமற்போனவர்களை இனிமேலாவது விடுவித்து இலங்கை அரசு தன்னைத் திருத்திக் கொள்ளவேண்டும்

### மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு,மே24

ஐ.நா.அமைப்பு இப்போது வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பை - செய்தியை - புரிந்துகொண்டு, இதுவரையில் காணாமற் போனவர்களை விடுவித்து, கணக்குக் கூறுவதன் மூலம் இலங்கை அரசு தன்னைத் திருத்திக்கொள்ள முன்வரவேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார் மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் மக்கள் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டாளருமான மனோ கணேசன் எம்.பி.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் உறுப்புரிமைப் பதவிக்கான தேர்தலில் இலங்கை, உலக நாடுகளால் தோற்கடிக்கப்பட்டமையை ஒட்டி அவர் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது வருமாறு:-

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இடம்பெறுவதற்கு இலங்கை அரசு எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

இச்சபையில் தொடர்ந்து இடம் பெறுவதன் மூலமாகத் தனக்கு சர்வதேச ஆதரவு தொடர்ந்து இருக்கின்றது என்ற பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் பலனளிக்காமல் போயுள்ளன.

மறுபக்கத்தில் இது எமது மக்கள் கண்காணிப்புக்குழு உட்பட தேசிய, சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கும் மற்றும் இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற செயற்பாட்டிற்கு ஒத்துழைத்த உதவி நல்கிய உலக நாடுகளுக்கும் கிடைத்துள்ள வெற்றியேயாகும்.

ஐ.நா.அமைப்பின் இந்தச் செய்தியைப் புரிந்துகொண்டு இதுவரையில் காணாமல் போனவர்களை விடுவித்து கணக்குக் கூறுவதன் மூலம் இலங்கை அரசு தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

உலகப்பிரசித்தமாகிவிட்டது

இலங்கையில் பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன என்பது இன்று உலகப் பிரசித்தமாகிவிட்டது. சீருடையிலும், சீருடை இல்லாமலும் வரும் நபர்கள் தமிழர்களைப் பலாத்காரமாகக் கடத்திச் செல்வது வாடிக்கையாகிவிட்டது. தமிழர்களைத் தெருநாய்களைப் போல் இழுத்துச் செல்லாதீர்கள் என்று நாம் சொன்னால் - காணாமல் போயுள்ளவர்களை விடுவியுங்கள் என்றும் நாம் சொன்னால் - இது வரை சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டவர்களுக்குக் கணக்குக் கூறுங்கள் என்றும் நாம் சொன்னால் - கூப்பாடும் கடத்தல் ஆகிய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட செல்வாக்கு மிக்கவர்களை சட்டத்திற்கு முன்னால் நிறுத்துங்கள் என்றும் நாம் சொன் னால் -



ஆளுவோருக்குப் புரிவ தில்லை. ஆளு வோருக்கு துதிபாடு பவர்களுக்கும் இவைபற்றிப் புரிந்தும் உறைப்பதில்லை.

இந்நிலையில், வெறுமனே கமிஷன்களையும், கமிட்டிகளையும் அமைத்து முறையீடு செய்வதற்கான தொலைபேசி இலக்கங்களையும், பூச்சிக்கப்பட்டோர்பெயர்ப்பட்டியலையும்வெளியிட்டு உலகை ஏமாற்றி வரும் நடைமுறைக்கு இன்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய முன்னாள் தலைமை நீதியரசர் பகவதியின் தலைமையிலான விற்பன்னர் குழுவின் வெளியேற்றத்துடன் இலங்கை அரசின் உண்மைச் சொரூபம் அம்பலத்துக்கு வரத் தொடங்கியுள்ளது.

எனவே, சர்வதேசத்தின் இந்த எச்சரிக்கையைப் புரிந்துகொண்டு நடப்பதற்கு இலங்கை அரசு இனிமேலும் தவறுமானால், இன்னும் எடுக்கப்படக் கூடிய தொடர் நடவடிக்கைகளுக்கு நாம் முகம் கொடுக்கவேண்டியிருக்கும்.

சர்வதேசசமூகத்தின்பிரதிநிதிகளைப் 'பயங்கரவாதிகள்' என்றும் 'முட் டாள்கள்' என்றும் அடையாளம் காட்டிய வர்கள்தான் இன்றைய நிலை மைக்கு முழுமுழுதாகப் பொறுப்பேற்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### நாளை

| | |
|---|---|
| வைகாசி 12 | 25.05.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | பி.ப. 03.41வரை |
| நட்சத்திரம் : | உத்தராடம் |
| | பி.ப. 02.49வரை |
| சுபநேரம் : | [illegible] - 10.22 |
| இராகுகாலம் : | 04.22 - 05.52 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**Mr.A.Mozes**
Team Leader
**Bronze Medal**

HNB ASSURANCE
For a brighter future

**Mr.A.Jeyasatheeswaran**
Insurance Advisor
**Bronze Medal**



**Mr.A.Ranjith**
Field Manager
**( Super Golden Medal)**



**Mr.T.Sivakumar**
Insurance Advisor
**Golden Medal**

HNB ASSURANCE
For a brighter future

நேற்றைய தினம் (23.05.2008) ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் யாழ்.பிராந்திய நிலையத்தில் 1ஆம் இடம்பெற்ற திரு.ஏ.றஞ்சித் அவர்களையும் அவருடன் விருதுகள் பெறும் வவுனியாக்கிளை ஊழியர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வட.பிராந்திய முகாமையாளரும் ஊழியர்களும்.**

(அ/552959)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் சங்கத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னின்று உழைத்தவரும் எமது சக பணியாளருமாகிய அமரர் **நிற்சிங்கம் யோகேந்திரா** அவர்கள் 21.05.2008 அன்று திடீர் மரணமான செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**தலைவர்,**
**பொதுமுகாமையாளர்,**
**சக பணியாளர்கள்.**

(74419)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 | 24 |
| 01 | 04 |
| 1918 | 2008 |



**திருமதி கார்த்திகேசு கனகாம்பிகை**

கவலைகளுக்காய் - உங்கள்
கரங்களைத் தந்தீர்!
அமைதி செய்ய- உங்கள்
அன்பினைத் தந்தீர்!
ஆறுதலுக்காய்- உங்கள்
அருகாமை தந்தீர்!
ஆதரவுக்காய்- உங்கள்
அனைத்தையும் தந்தீர்!

மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும்;
**குடும்பத்தினர்.**

(74369)

## கோழிக் குஞ்சுகள் விநியோகம்

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் கோழிக்குஞ்சுகள் பண்ணையாளர்களுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்பட்டன.

அச்சுவேலி கோழிப்பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகளே பண்ணையாளர் களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அடுத்த மாதம் கோழிக் குஞ்சுகள் விநியோகத்திற்கான பதிவுகள் இடம் பெற்று வருவதாகவும் குஞ்சுகள் பெற விரும்பும் பண்ணையாளர்கள் முற்பணம் செலுத்தி பதிவு செய்யுமாறு கால்நடை வைத்தியர் கேட்டுள்ளார்.

(202-207)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறெயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர்.

(74411)

## இறைச்சிக் கோழி விற்பனை

நாளாந்தம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். எம்மிடம் கூரை ஓடுகளும் விற்பனைக்கு உண்டு.

**செம்மணி பாம்,**
77/3, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு.

(74403)

## விற்பனைக்கு

புறொயிலர் 3kgக்கு மேற்பட்டது. உயிருடன் 1kg 350/=, சுத்தம் செய்தது 500/= மற்றும் ஊர்ச்சேவல், கல்பேட் என்பன விற்பனைக்குண்டு.

**தாசன்பாம்,**
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(74412)

**உயர்ச்சிப் பாதையில் இணைவதற்கு ஓர் அரிய வாய்ப்பு**




தரம் 04 தொடக்கம்
O/L வரை

இவ்வருடத்திற்கான அனுமதி வழங்கும் இறுதிச் சந்தர்ப்பம்

31 வரை
மட்டுமே

Irupalai, Kopay

## அந்தியேட்டி அழைப்பு

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 | 25 |
| 12 | 04 |
| 1944 | 2008 |



25.04.2008 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் கந்தவனம் குணலிங்கம்**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (25.05.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இக்கிரியைகளிலும் தொடர்ந்து 12 மணியளவில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றேன்.

[தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளவும்]

சாந்தி நிலையம்,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

**க.நாகலிங்கம் (சகோதரர்).**

(74386)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 | 24 |
| 01 | 05 |
| 1981 | 1999 |



**செல்வன் இராஜகோபால் கங்கேசன் (கங்கு)**

(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, A/L 1999 வர்த்தகப்பிரிவு மாணவன்)

எங்கள் குடும்ப விளக்காய் இருந்தே
இங்கொளி செய்வாய் என்றே இருந்தோர்
கங்கு நீ பிரிந்தனை நின்தன் பிரிவை
எப்படி மறப்போம் எப்படிப் பொறுப்போம்
ஆண்டுகள் செல்லலாம் ஆயினும் எங்கள்
நீண்ட துயரம் நீங்கிடுமாமோ!

இல.29, சம்பியன் லேன்,
கொக்குவில்.

**குடும்பத்தினர்.**

(74383)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்கிந்தியத் தீவுகளுடனான முதல் டெஸ்ட்

# பொண்டிங் சதம்; ஆஸி. பலம்



கிங்ஸ்ரன், மே 24

ரிக்கி பொண்டிங் டெஸ்ட் அரங்கில் 35ஆவது சதத்தை விளாச, மேற்கிந்தியத் தீவுகளுடனான முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி பலமான நிலையைப் பெற்றது. நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற முதல்நாள் ஆட்டநேர முடிவில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் ஆஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 301 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள ஆஸ்திரேலிய அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடுகின்றது. டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்றுமுன்தினம் கிங்ஸ்ரனில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்தப் போட்டி மூலம் டெஸ்ட் அரங்கிற்கு ஆஸ்திரேலிய அணியின் பிரட் ஹடின் மற்றும் மேற்கிந்தியத் தீவுகளின் ஜெகர்னோத் ஆகியோர் அறிமுகமாகியிருந்தனர்.

ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர்களான பில் ஜக்கிஸ், சைமன் கட்டிச் ஆகியோர் களமிறங்கினர். ஆரம்பத்தில் எட்வாட்ஸ் வேகத்தில் பிரகாசிக்க ஆஸி. அணி தடுமாற்றம் கண்டது. இவரது பந்துவீச்சில் சைமன் கட்டிச் 12 ஓட்டங்களுடனும், பில் ஜக்கிஸ் 9 ஓட்டங்களுடனும் நடையைக் கட்டினர்.

தொடர்ந்து 3ஆவது விக்கெட்டில் இணைந்த அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் - மைக்கல் ஹசே ஜோடி அணியைத் தூக்கி நிறுத்தியது. சிறப்பாக ஆடிய இருவரும் மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சை சிதறடித்தனர்.

அதிரடி கலந்திருந்த பொண்டிங்கின் ஆட்டத்தால் ஆஸ்திரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது. 137 பந்துகளை எதிர்கொண்டு தனது 35ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்திசெய்து அசத்தினார் பொண்டிங். மறுமுனையில் நின்ற மைக்கல் ஹசே தனது அரைச்சதத்தை நிறைவுசெய்யவும் 137 பந்துகளையே எடுத்துக்கொண்டார்.

3ஆவது விக்கெட்டுக்காக 137 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் ஜெகர்னோத்தின் பந்துவீச்சில் மைக்கல் ஹசே 56 ஓட்டங்களுடன் (6 பவுண்டரிகள்) ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த பிரட் ஹொட்ஜ் சிறப்பான ஒத்துழைப்பை வழங்க தனது அதிரடியாட்டத்தை பொண்டிங் தொடர்ந்தார். இந்த ஜோடி தம்மிடையே 119 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் - முதல் நாள் ஆட்டம் முடிவுறும் தறுவாயில் ரிக்கி பொண்டிங், பிராவோவின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். 224 பந்துகளை எதிர்கொண்ட அவர், ஒரு சிக்ஸர் மற்றும் 17 பவுண்டரிகளுடன் 158 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

நேற்றுமுன்தினம் முதல்நாள் ஆட்டம் முடிவடையும் போது ஆஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 301 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பிரட் ஹொட்ஜ் 53 ஓட்டங்களுடனும், மிற்செல் ஜோன்ஸன் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.

## கொல்கத்தா - டில்லி போட்டி மழையால் கைவிடப்பட்டது

### இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி

டில்லி, மே 24

ஷேவாக்கின் டில்லி அணிக்கும், கங்குலியின் கொல்கத்தா அணிக்கும் நேற்றுமுன்தினம் டில்லியில் நடைபெறவிருந்த ஐ.பி.எல். ருவென்ரி/20 லீக் போட்டி மழையால் ரத்து செய்யப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

ஐ.பி.எல். ருவென்ரி/20 தொடர் சென்னை, மும்பை, ஹைதராபாத் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் நடக்கிறது. டில்லியில் நேற்றுமுன்தினம் ஷேவாக் தலைமையிலான டில்லி டேர் டெவில்ஸ், கங்குலியின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கிடையே மிக முக்கியமான 47ஆவது லீக் போட்டி நடக்க இருந்தது.

மழையால் ஆட்டத்தை சிறிது நேரம் கழித்து நடத்த நடுவர்கள் முடிவு செய்தனர். ஆனால், இரவு பத்து மணி வரை விடாமல் தொடர்ந்து மழை பெய்தது. மேலும் மைதானத்தில் விளையாட முடியாத அளவுக்கு தண்ணீர் தேங்கியதால் போட்டி கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஐ.சி.சி. விதியின்படி இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப் பட்டது. இதனால் இரு அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.




## கொல்கத்தா அணியை விற்க ஷாருக்கான் திட்டம்?

கொல்கத்தா, மே 24

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் திறமை திருப்தி அளிக்காததால் அந்த அணியை விற்க நடிகர் ஷாருக்கான் திட்டமிட்டிக்கின்றார் எனத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

அணிக்கு கட்டிய ஏலத் தொகை மற்றும் வீரர்களுக்கான சம்பள ஏலத் தொகை, கேளிக்கை வரி ஆகிய அனைத்தையும் சேர்த்து கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒரு போட்டிக்கு ஏறத்தாழ 50 லட்சம் ரூபா முதல் 75 லட்சம் ரூபா வரை இழப்பு ஏற்படுவதாக கணக்கிட்டுள்ளார்கள்.

ஐ.பி.எல். உருவாக்கப்பட்டதிலிருந்து அதில் மிகுந்த ஆர்வம் செலுத்தி வந்த ஷாருக்கானே அடுத்த ஆண்டுக்கான உரிமைகளை விற்றுவிடலாமா என்று சிந்தித்து வருகிறார். மூன்று ஆண்டு காலம் அணி உரிமை பெற்றுள்ள இவர், அடுத்த ஆண்டும் நட்டத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது என்ற முடிவுக்கு வந்துள்ளார். இதனால் அணியை விற்று விடுவதற்கு அவர் முடிவு செய்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மியன்மாரில் நிவாரணப் பணியில் ஈடுபட வெளிநாட்டு அமைப்புகளுக்கு அனுமதி

### ஐ.நா. செயலாளருடனான சந்திப்பில் இராணுவ ஜெனரல் உடன்பாடு

ரங்கூன்,மே,24

மியன்மாரில் நர்கிஸ் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், நிவாரணப் பணிகளில் ஈடுபட வெளிநாட்டு நிவாரணப் பணி ஊழியர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ - மூனுக்கும் மியன்மார் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் தான் செவ்யிக்குமிடையில் இடம் பெற்ற பேச்சுக்களில் இதற்கான உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

மியன்மாரில் பழைமைவாய்ந்த தலை நகரான நேபிடாவில் இவ்விருவருக்குமிடையிலான பேச்சுகள் நடைபெற்றன. இச்சந்திப்பை அடுத்து ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ-மூன் அத்தகவலை வெளியிட்டுள்ளார்.

சூறாவளி அனர்த்தப் பகுதிகளில், நிவாரணப்பணிகளில்ஈடுபடவெளிநாட்டுநிவாரணப் பணி ஊழியர்களுக்கு மியன்மார் அனுமதி மறுத்துவந்தது. தற்போது இதன் இறுக்கமான பிடிவாதத்தில் தளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கதொன்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு நிவாரணப் பணி ஊழியர்களின் சேவையை முழுமையாக ஏற்றுகொள்ள முன்னர் மியன்மார் இராணுவத்தலைவர்கள் மறுத்துவந்தார்கள். தேவைகளும், சேவைகளும் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியுள்ளனவென வெறும் காரணம் கூறி வந்தார்கள். எனினும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப்பணிகள் முழுவீச்சில் நடைபெறவில்லை.

நர்கிஸ் சூறாவளி அனர்த்தங்களுக்கு 78 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். 56 ஆயிரம் பேர் வரை காணாமல் போயுள்ளனர். மே 2 ஆம் திகதி விளைந்த இந்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களில், கால்வாசி பேருக்குக் கூட நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை என பரவலாகச் சுட்டிகாட்டப்பட்டது.

இது தொடர்பான முறையீடுகளையொட்டி, ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ-மூனால் அனுப்பட்ட அவசரக் கடிதத்துக்கும், அவரது தொலைபேசி தொடர்பாடலுக்கும் பதிலளிக்க சிரேஷ்ட தலைவர் தவறிவிட்டார். இதற்கு பின்னரே, ஐ.நா.செயலாளர் மியன்மாருக்கான நேரடிவிஜயத்தை மேற்கொள்ளலானார்.

ஐ.நா. பொதுச் செயலாளர் புதன்கிழமை மியன்மாரின் தலைநகரான ரங்கூனை வந்தடைந்தார். மறுதினமான வியாழக்கிழமை விமானமூலம் வெள்ளத்தில் மூழ்கியுள்ள வயல் வெளிகள் , நிர்மூலமாக்கப்பட்ட கிராமங்கள் ஆகியவற்றுக்கு மேலாக பறந்து ஐராவதி டெல்டாவிலுள்ள அரச நிவாரண முகாமையை அடைந்தார்.

''சூறாவளியால் விளைந்துள்ள பேரனர்த்தங்களையும், மக்களின் பரிதவிப்பையும் நேரில் கண்டு அதிர்ச்சியடைந்தேன். இந்த அவலத்தைப் போக்க சர்வதேச சமூகம் தயாராகவுள்ளது. தற்போதைய உடன்பாட்டால் நிவாரண பணிகள் தங்குதடையின்றி சுமுகமாகவும் [illegible] பெற வழி பிறந்துள்ளது.'' - என்றும் அவர் கூறியுள்ளார்.

## 'த நேஷன்' வார ...

(முதலாம்பக்கத் தொடர்சி)

கார்க்கதவு திறந்து காணப்பட்டதாகவும் சாவி உள்ளே காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ள கீத் நொயரின் மனைவி, பின்னர் தெஹிவளை பொலிஸில் இது குறித்து முறைப்பாடு செய்தார். இதனைத் தொடர்ந்து 'த நேஷன்' பத்திரிகையின் ஆசிரியரும் இது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவம் வியாழக்கிழமை ஊடகவியலாளர்கள் மத்தியில் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

ஊடக அமைப்புகள், அரச உயர் அதிகாரிகள் பலரை இதுகுறித்து தொடர்பு கொண்டதுடன் அமைச்சர்கள் சிலரின் கவனத்திற்கும் இந்தச் சம்பவம் கொண்டு வரப்பட்டது.

இதேவேளை, அதிகாலை 4மணியளவில் அவரது இல்லத்திற்கு அருகில் சுயநினைவற்ற நிலையில் சிலரால் நொயர் விடுவிக்கப்பட்டுள்ளார். உடனடியாக கொழும்பு தேசிய மருத்துவ மனையின் விபத்துகள் சேவைப் பிரிவில் சேர்க்கபட்ட கீத் நொயர் அவரச சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

கீத் நொயர் அதிர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகிறார் எனவும் அவரிடமிருந்து உடனடியாக வாக்கு மூலத்தைப் பெற முடியாதுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல வருட பத்திரிகை அனுபவத்தைக் கொண்டவரான நொயர் சிறுபான்மை பறங்கி இனத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'டெய்லி மிரரின்' பிரதி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ள நொயர் 'த நேஷன்' செய்தித்தாளில் பாதுகாப்பு நிலைவரம் குறித்து கட்டுரைகளை எழுதி வருகின்றார்.

சமீபத்தில் அவர் பாதுகாப்பு அமைச்சை விமர்ச்சித்துக் கட்டுரையொன்றை எழுதியிருந்தார்.

அரசு யுத்தத்தை அணுகும் முறையைக் கண்டித்தும் உயர் அதிகாரிகளை விமர்சனம் செய்தும் கட்டுரைகளை அவர் எழுதி வந்தார் என சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

வடக்கில் இடம் பெறும் யுத்தம் குறித்து சுயாதீனமாக எழுதியும் ஆய்வு செய்தும் வந்தமையே நொயர் தாக்கப்பட்டமைக்குக் காரணம் என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

இது வெறுமனே ஊடக சுதந்திரம் மீறப்பட்ட விடயமல்ல, ஊடக சுதந்திரத்திற்கு விழுந்துள்ள பாரிய அடி எனத் தெரிவித்துள்ளது சுதந்திர ஊடக இயக்கம். இலங்கை அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் வெகுதூரத்தில் உள்ள நாடென்பதை இந்த சம்பவம் புலப் படுத்தியுள்ளது எனவும் அது தெரிவித்துள்ளது.

'இராணுவம் அதன் தளபதியின் சொந்த வீட்டுச் சொத்தல்ல' என்று சாரப்பட்ட தலைப்பில் கடந்த 11 ஆம் திகதி 'த நேஷன்' வார இதழில் அவரால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் இராணுவ விடயங்கள் தொடர்பான கட்டுரை பாதுகாப்பு வட்டாரங்களில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

## சிலியில் கடும் மழை; வெள்ளம் 13 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

சந்தியாகோ, மே 24

தென் - மத்திய சிலியில் பலத்த மழையாலும் வெள்ளப் பெருக்காலும் பாரிய அனர்த்தங்கள் விளைந்துள்ளன. இவற்றிற்கு இதுவரை ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். 13 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என அரசு அறிவித்துள்ளது.




நதிகள் பெருக்கெடுத்துள்ளன, பல இடங்களில் கரைகள் உடைப் பெடுத்து வெள்ளம் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கிறது. உயிர்ச் சேதங்களைத் தவிர்க்கும் பொருட்டு ஆயிரக் கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 24 மணித்தியாலய கடும் மழையால் வல்பெரைஸ்ஸோ நகர வீதிகள் நதிகளாக மாறியுள்ளன என அதிகாரியொருவர் ரொய்ட்டர்செய்திசேவைக்குக் குறிப்பிட்டுள்ளார்.

## பழங்குடியினப் போராளிகளுடன் பாகிஸ்தான் அரசு அமைதி ஒப்பந்தம்

பெஷாவர், மே 24

பாகிஸ்தான் அரசு தலிபான் ஆதரவுத் தீவிரவாதிகளுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் அரசு, நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டது.

பாகிஸ்தானில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற மக்கள் கட்சி, கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து தீவிரவாதிகளுடன் நடந்த பேச்சுகளில் உடன்பாடு ஏற்பட்டது. 15 அம்ச ஒப்பந்தத்தில் இருதரப்பினரும் கையெழுத்திட்டனர். இதில் மாநில அரசு அதிகாரிகள் குழுவும் உள்ளூர் தலிபான் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டனர். அதன்படி பழங்குடி இனமக்களின் பகுதியான சுவாட் பிரதேசத்தில் இருந்து இராணுவத்தை படிப்படியாக திரும்பப் பெற்றுக்கொள்ளும். இஸ்லாமிய ஷரியத் சட்டம் அந்தப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும். இதற்குப் பதிலாக தீவிரவாதிகள் ஆயுதப்பயிற்சி முகாம்களை மூடவேண்டும். வெளிநாட்டு தீவிரவாதிகளை அரசிடம் ஒப்படைக்கவேண்டும். தற்கொலை தாக்குதல்களை கைவிட வேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறிகண்டிக் கிளைமோரில் உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தோர் விவரம்

கிளிநொச்சி,மே24

முறிகண்டியில் நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த வர்களின் விவரம் வருமாறு,

**உயிரிழந்தோர்**

புன்னீர்ச்செல்வம் அழகராணி (வயது45) ஐந்து பிள்ளைகளின் தாய், சாமிக்கண்டு கறுப்பையா, கறுப்பையா உங்கா, கணேஷ் தனராஜா(வயது34) சாரதி, செல்வராஜா கமலாதேவி(வயது 34), சுப்பிரமணியம் தனலக்ஷ்மி(வயது 54), அழகன் சுப்பிரமணியம்(வயது 40), சுப்பிரமணியம் சரஸ்வதி(வயது40), பெரிய சாமி விஜி, விஜிதா லக்ஷிகா(வயது 18), விஜி நந்தா, விஜி தனு(வயது 9), விஜி விதுஷன்(வயது7), இராஜேந்திரம் கலா தேவி(வயது 29), சந்திரமோகன் கார்த் திகா(வயது10)

**காயமடைந்தோர்**

சோதிகா, கார்த்திக், காயமடைந்த மற்றும் இருவரது பெயர் விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை. (அ-02)

## விமானக்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

குதலில் அப்பகுதியில் இருந்த பத்து வீடுகள் முற்றாக் அழிந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## முறிகண்டி, மல்லா...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

முறிகண்டி - அக்கராயன் வீதியில் அப்பாவிப் பொதுமக்கள் பயணித்த 'ஹயஸ்' வாகனம் மீது நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் 6 சிறுவர்கள் உட்பட 16 அப்பாவிகள் பலியாகினர். இரு சிறுமிகள் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை தேசிய பாதுகாப்புக்கான ஊடக தகவல் மையம் தனது இணையத்தளத்தில் வெளியிட்டி ருக்கின்ற அறிக்கை ஒன்றில் மறுத்திருக் கின்றது.

உயிரிழந்தவர்களில் நான்கு ஆண்கள், ஆறு பெண்கள், நான்கு சிறுமிகள், இரு சிறுவர்கள் அடங்குகின்றனர்.

குடும்ப நிகழ்வு ஒன்றில் பங்குபற்றுவதற்காக முறிகண்டி நோக்கி வந்து கொண்டிருந்த அக்கராயன் பாரதிபுரத்தைச் சேர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இந்த விபரீதத்தை எதிர்கொள்ள வேண்டியவர் களானார்கள்.

இந்தச் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்த ஐவர் மற்றும் காயமடைந்த இருவர் கிளிநொச்சி, பாரதிபுரம் பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் என்று பாடசாலை அதிபர் க.இராஜேந்திரம் பி.பி.ஸி தமிழோசைக்கு தெரிவித்தார்.

முறிகண்டிக் கோயிலில் இருந்து அக்கராயன் வீதியில் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் இந்தக் கொடூரச் சம் பவம் இடம்பெற்றிருக்கின்றது.

ஒரு குடும்பம் முற்றாக ஐந்துபேரை- அனைவரையும்-இழந்துள்ளது.

**மல்லாவியில்**

முறிகண்டியில் கிளைமோர்த் தாக்குதல் நடத்ததப்படுவதற்கு முன்னர் - 18 மணித்தியாலங்களுக்கு முன்னதாக- மல்லாவி பகுதியில் மாங்குளம்- வெள்ளங்குளம் வீதிக்கு இடைப்பட்ட கல்விளான் பகுதியில் வியாழக்கிழமை இரவு எட்டு மணியளவில் நோயாளர் ஏற்றிச்செல்லும் அம்புலன்ஸ் வண்டிமீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்தக் தாக்குதலில் அரசாங்க ஊழியர் இருவர் கொல்லப்பட்டனர்.

கிளிநொச்சியில் இருந்து ஏற்றிவரப்பட்ட நோயாளிகளை வவுனியா வைத்தியசாலையில் இந்த அம்புலன்ஸ் சேர்த்த பின்னர் கிளிநொச்சிக்கு அது திரும்பிக் கொண்டிருக்கும் வழியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

இச்சம்பவத்தில் மன்னார் மாவட்ட கடற்றொழில் அபிவிருத்தித் திணைக்களகத்தின் உதவிப்பணிப்பாளரான போல் ஜூலியன் (வயது - 55) மற்றும் சுகாதார சிற்றூழியரான சாந்தகுமாரன் ஆகியோரே உயிரிழந்தனர்.

உயிரிழந்த சாந்தகுமாரின் மகள் லக்சிகா (வயது - 8), வாகனச் சாரதி சசிசேகர் (வயது - 39) ஆகியோரும் மற்றும் இருவரும் படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-2-உ)

## வவுனியாவில் நேற்று பூரண ஹர்த்தால்

மாரடைப்பினால் மரணமடைந்த புலிகளின் மூத்த தளபதி பால்ராஜின் மறைவுக்கு துக்கம் அனுஷ்டிக்கும் வகையில் வவுனியாவில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தால் காரணமாக வவுனியா நகரில் நேற்று கடைகள், அலுவலகங்கள் என்பன திறக்கப்படவில்லை. பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களையும் வீதிகளில் காணமுடியவில்லை. வாகன ஓட்டங்களின்றி மக்கள் நடமாட்டமின்றி நகர வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. எனினும், இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, மே24

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.இப் போட்டிகளுக்கான அனுசரணை ஈ.எஸ். பேரம்பலம் சகநிறுவனம் வழங்குகின்றது.

* * *

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் 30 ஓவர் களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள கால்இறுதி ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிக ளின் விவரங்கள் வருமாறு:-

* காலை 8.30 மணி - யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் வி.க. எதிர் தெல்லிப்பழை யூனியன் வி.க.

* யாழ்ப்பாணம் பற்றீஸியன்ஸ் வி.க. எதிர் திருநெல்வேலி வி.க.

* * *

மட்டுவில் வடக்கு சபீனா முன்பள்ளி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி லூர்த்துமாதா தேவாலய முன்றிலில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு ஜே.ஆர்.எஸ்.அமைப்பின் தென்மராட்சி இணைப்பாளர் எம்.ஏ. மரிய அன்ரனி பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (202-236)

## அம்பாறையில்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

கிளைமோர்த் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஊடகவியலாளர்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியம், முஸ்லிம் மீடியா போரம், உழைக்கும் ஊடக ஊழியர் சம்மேளனம் ஆகிய ஐந்து ஊடக அமைப்புகளுடன், அரச சார்பற்ற நிறுவங்களின் பிரதிநிதிகள் மற்றும் இடதுசாரி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒன்றிணைந்து ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல், ஊடகவியலாளர்கள் கொலைசெய் யப்படுகின்றமை போன்றவற்றுக்கு எதிர்ப் புத் தெரிவித்து கடும் தொனியில் கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அத்துமீறி அருகில் ஜனாதிபதி தங்கிருக்கும் அலரி மாளிகைக்குள் நுழைந்துவிடலாம் என்ற அச்சத்தால் நூற்றுக்கணக் கில் கலகம்அடக்கும்பொலிஸாரும் அங்கு குவிக் கப்பட்டிருந் தனர்.

ஆர்ப்பாட்டம் முடிவடைந்ததும் ஆர்ப்பாட்டக் காரர்கள்அங்கிருந்து அமைதியாகக்கலைந்து சென்றனர். (சி)

BRIGHTMAN
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
பேராசிரியர்
திரு. லீலாகிருஷ்ணன்
ஆரம்பம்:- இன்று 24.05.08
SAT. 2.30 p.m.
★ பழைய பிரிவுகளும் நடைபெறுகின்றது.

## யாழ். பல்கலையில் புகைப்படக் கண்காட்சி

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறையின் ஏற்பாட்டில் மனநலவைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸின் 'பனையிடைவெளி' எனும் புகைப்படக் கண்காட்சி நாளை முதல் மூன்று நாள்களுக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட புதிய விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சமூகவியல் சமூகத்தின் தலைவர் எஸ். இதயதீபன் தலைமையில் நாளை மு.ப. 9.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முக லிங்கன் கண்காட்சியினை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

வாழ்த்துரைகளை துணைவேந்தர், கலைப் பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா மற்றும் சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்துவர்.சிறப்புரையினை மனநல மருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ் நிகழ்த்துவார்.

## 'த நேசன்' பிரதி ஆசிரியர் தாக்குதல் சம்பவம் குறித்து விசாரிக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மே 24

'த நேஷன்' ஆங்கில வார இதழின் பிரதி ஆசிரியர் கீ த்நொயர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட விசாரணை ஒன்றை நடத்துமாறு எம்மிடம் உத்தரவிட்டுள்ளார் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தவை வருமாறு:-

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் இந்தச் சம்பவம் தொடர்பிலான விசேட விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. இந்த விசாரணைகளை நடத்துவதற்கென விசேட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது - என்றார். (சி)

## காத்தான்குடியில்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

சிலரே இச்சம்பவத்திற்குக் காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக் கிறார்.

காத்தான்குடி மீரா ஜும் ஆ பள்ளிவாசலில் முதலமைச்சர் பிள்ளையானும் அமைச்சர் ஹிஸ்புல்லாவும் நேற்று முஸ்லிம்களைச் சந்தித்து உரையாடினர். அப்போதே பிள்ளையான் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

எமது பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த மோசமான சம்பவம் தொடர்பாக நான் கவலை தெரிவிக்கிறேன்.

கிழக்கில் சீரழிந்து போயுள்ள தமிழர் - முஸ்லிம்களின் உறவைக் கட்டியெழுப்புவதே எனது ஒரே நோக்கம். ஆனால் சில சக்திகள் அந்த நோக்கத்திற்கு எதிராகச் செயற்படுகின்றன.

நான் முதலமைச்சரானமையைத் தாங்க முடியாத சில சக்திகளே இந்தச் சம்பவங்களுக்குக் காரணம். இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். அதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் நான் எடுப்பேன்.

காத்தான்குடியில் உள்ளவர்கள் கொக்கட்டிச்சோலைக்கும், கொக்கட்டிச் சோலையில் உள்ளவர்கள் காத்தான்குடிக்கும் வந்து வர்த்தக நடவடிக்கைகளில் தாராளமாக ஈடுபடக்கூடிய சூழலை நான் ஏற்படுத்தித் தருவேன்.

இச்சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் பொறுமையாக இருந்து தமிழர் - முஸ்லிம் உறவைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கிழக்கைக் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்கவேண்டும். - என்று அங்கு தெரிவித்தார் அவர். (சி)

தேவை
பிரபல கணனி நிறுவனத்திற்கு Hardware, Graphic Designing, Programing (C++, Java...) கற்பிப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவை. 30.05.2008 இற்கு முன் Bio data இனை அனுப்பிவைக்கவும்.
விள.இல.3100, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (74424)

## வழக்கு ஒத்திவைப்பு

லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கு ஜூலை 2ஆம் திக்திக்கு ஒத்திவைக்கப் பட்டது.விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான், உளவுப் பிரிவைச் சேர்ந்த சாள்ஸ், கோமதி மணிமேகலை ஆகியோருக்கு எதிராக 2005 ஜனவரிக்கும் 2005 ஓகஸ்ட்டுக்குமிடையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைக் கொலைசெய்ய சதிசெய்தனர், கொலை செய்தனர் என்பன போன்ற குற்றச்சாட்டுகள் இவ்வழக்கில் சுமத்தப்பட்டுள்ளன.

## இலங்கைக்கு மட்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

மற்றும் புதிய வகை சிறிய ரக ஆயுதங்களை சீனாவே முக்கியமாக வழங்குவதாகவும் ஜேன்ஸ் புலனாய்வு சஞ்சிகை தெரிவித்துள்ளது.

உறுதிப்படுத்தப்படாத புலனாய்வுத் தகவலாகவே இதுவரை இருந்து வந்த இந்த விடயம் இப்போது வெளிப்படையாகியுள்ளதாகவும் ஜேன்ஸ் சஞ்சிகை தனது மே மாத இதழில் தெரிவித்துள்ளது.

நவீன 5.56 எம்.எம்., கியூ. பி.இஸட் - 95 ரகத் துப்பாக்கிகள் உட்பட சீனாவில் தயாரிக்கப்பட்ட நவீன தாக்குதல் ஆயுதங்கள் விடுதலைப் புலிகளிடம் காணப்படுவது அவர்களது இணையத்தளங்களில் வெளியாகியுள்ள புகைப்படங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவை இலங்கை இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்டவை என விடுதலைப் புலிகள் தெரிவிக்க முடியாது.

விடுதலைப் புலிகள் சீனாவிலிருந்து சிறிய ரக ஆயுதங்களை மாத்திரமல்ல, மோட்டார்கள் மற்றும் பீரங்கிகளுக்குத் தேவையான வெடிகுண்டுகளையும் பெறுகின்றனர்.

இலங்கை இராணுவத்திற்கும் சீனா பெரிய அளவில் சிறியரக ஆயுதங்களை வழங்கும் முக்கிய நாடாகவுள்ளமையே கவலைக்குரியது என்றும் ஜேன்ஸ் தெரிவித்துள்ளது.

சீனா அரசிற்குச் சொந்தமான 'நொரிங்கோ பொலி டெக்னோலஜி நிறுவனம்' இலங்கைக்கு ஆயுதத் தளபாடங்களை விற்பனை செய்து வருகின்றது. (உ)

UNIT
Jaffna Nelliady
Intel Dual Core 2.0Ghz, Asus P5GC-Mx, 512mb DDR2 Kingston, 80Gb/Sata HDD, 17" Samsung / Intex Color CRT, ATX Case with SMPS, DVD-Writter, UPS, Ps2 Keyboard, Mouse & Speaker 53,750/-

**Mother Boards**
Asus P5GC-MX1333Mhz 6950/-
Foxconn intel 945 6300/-
AsRock LGA 5800/-
Ecs Intel 945 1333Mhz 6300/-

**Rams**
Kingston DDR1 256-2500/- 512- 3750/-
Kingston DDR2 1Gb-2750/- 512- 1550/-

**Hard Disks & Optical Drives**
40Gb IDE 4800/-
80Gb IDE 5800/-
250Gb Sata 8600/-
DVD-RW 4000/-
External Enclosure USB 4750/-
Flash 4Gb Kingston 2400/-

**Monitors**
15" Samsung / Viewsonic CRT 11900/-
17" Samsung / Intex Flat CRT 14500/-
17" Samsung LCD Wide 25500/-
19" Samsung LCD Wide 31000/-
128Mb AGPVGA 4750/-
256Mb PCI EXPRESS VGA 7500/-

**Power & Casings**
ATX LGA Casings with SMPS 4050/-
SMPS - ATX LGA 500W 2500/-

**Toners:**
HP 12A, 13A, 15A, 35A, 49A, 53A&92A
Canon EP22, 25 & 26, 303, 308

**Others**
Keyboard Normal 500 MultiMedia 900
Mouse Optical 500/-, 600/-, 900/-, 1500/-
Speaker 650/-, 1250/- & 2500/-
Woofers Creative / MicroLab 4000/-
Printer & Scanners
Hp D1460-6250/-, HP P1005-16900/-
Canon Lide 25 6900/-, HP G2410 - 11900/-

Brand New Laptops From 59000/-
New Intel Pentium From 39000/-
Special Reduction for Dealers, Assemblers, Schools, Go's & NGO's
We Are Not Big But The Best
ஸ்லேகராவத், 347, K.K.S Road, Jaffna, ✆ 4590720, 2228844
MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org